# ரெட்டி மலர்

உறவை வளர்ப்போம் உணர்வை காப்போம்

தமிழ் மாத இதழ்

REDDY MALAR, Tamil Monthly

| | | | |
|---|---|---|---|
| மலர் : XVIII | இதழ் : 2 | மே 2024 | விலை. ரூ.15/– |
| Vol. : XVIII | Issue No : 2 | MAY 2024 | Price. Rs.15/ |


## ஓ.பி.ஆர் அறக்கட்டளை சார்பில் திரு.K.N.அருண்நேரு எம்.பி. அவர்களுக்கு பாராட்டு



## திரு.V.வைத்திலிங்கம் எம்.பி. புதுச்சேரி பாராளுமன்ற தொகுதியில் வெற்றி



செய்தி உள்ளே..... 1

என்றென்றும் உங்களுடன்

# HJ ஹரிணி ஜுவல்லர்ஸ்



## தங்கநகை சேமிப்புத் திட்டத்தில் செய்கூலி, சேதாரம் இல்லை

64-A, 65, சிந்தாமணி பஜார், (அண்ணா சிலை அருகில்) திருச்சி - 2

Cell: 0431-2704916, 81488 24916 e-mail: harinijewell2014@gmail.com

# ரெட்டி மலர்

நிறுவனர் :
"கல்வி காவலர்" கே.ரெங்கராஜன் (KRT)

மலர் : XVIII | மே 2024 | இதழ் : 2



வெளியீட்டாளர் : V. செல்வராஜு
ஆசிரியர் : R. இராஜசேகரன்
கௌரவ ஆசிரியர் : R. புகழேந்திரன்
இணை ஆசிரியர்கள் : R. அன்பழகன்
P. ஜனார்த்தனம்
துணை ஆசிரியர்கள் : D. மணிவாசகன்
V. ஜெயக்குமார்
சட்ட ஆலோசகர் : R. பாபு B.A.,B.L.,

**விற்பனைப் பிரிவு மேலாளர்**

R. காமராஜ்

**விற்பனைப் பிரிவு நிர்வாகிகள்**

R. நந்தகுமார்
N. சுந்தரராஜு
M. ஜெயபிரகாஷ்

**விளம்பரப் பிரிவு மேலாளர்கள்**

J. ஐயப்பன்
P. மோகன்

**விளம்பரப் பிரிவு நிர்வாகிகள்**

S. காமராஜ்
R. பார்த்திபன்
S. பூவேந்தரசு

**ஆலோசனைக் குழு**

L. தமிழரசன், சென்னை
திருமதி.தேவிமோகன்
S. மோகன், கோவை
N. பெரியசாமி, திருச்சி
R.V. செல்வகுமார், விளாத்திகுளம்
R. சண்முகைய்யா, RSR சிவகாசி
P. தாமோதரன், தாம்பரம்
M. கிருஷ்ணசாமி, சென்னை
T. ரவிச்சந்திரன், விழுப்புரம்
R.D. ராஜமுருகன், விருதுநகர்
S. சதீஷ்குமார், மதுரை (மோனிகா)
S. ராமராஜன், திண்டுக்கல்
K. சூரியகுமார், தஞ்சாவூர் மாவட்டம்


## இதழின் உள்ளே........


- ஆசிரியர் தலையங்கம் - 4
- நிறுவனத்தலைவர் மடல் - 5
- உத்தமர் ஓமந்தூரார் வாழ்க்கைத் தொடர் - 6-8
- சத்தியமங்கலம் பகுதியில் விழிப்புணர்வு முகாம் - 9-11
- வயலூர் ரெட்டி நல சங்கம் - 12
- திரு.K.N.அருண்நேரு வெற்றிச் செய்தி - 13-14
- திரு.V.வைத்திலிங்கம் வெற்றிச் செய்தி - 15-16
- சங்கச் செய்திகள் - 17-22
- நிறைவான சேமிப்பு, வளமான வாழ்வு - 23
- விவசாயப் பகுதி - 24
- மருத்துவப் பகுதி - 25
- உறவின்முறை சங்கம் - கட்டுரை - 26-27
- திருமணத் தகவல்கள் - 29-34


## அன்பான வாசகர்களே!

தபால் பெட்டி பகுதிக்கு உங்களின் கருத்துகளை எழுதி அனுப்புங்கள். நிறையோ, குறையோ உங்கள் கருத்து எதுவாக இருந்தாலும் அஞ்சலட்டையில் உங்களின் எண்ணங்களை எழுதி அனுப்புங்கள். தன்னம்பிக்கை வரலாறு, சாதனையாளர்களின் வெற்றி செய்தி, கதைகள், கட்டுரைகள் மற்றும் ரெட்டியார் சமூக சங்க செய்திகளை எழுதி அனுப்பலாம். எங்களுக்கு வரும் மடல் மூலம் உங்களின் தேவை அறிந்து கொண்டு அதற்கேற்ப சிறப்பான கட்டுரைகளை உங்களுக்குத் தரமுடியும். கடிதங்களை **ரெட்டி மலர்** அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டுகிறோம்.


## அலுவலக முகவரி

எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு,
ஜாபர்கான்பேட்டை, சென்னை – 600 083.
: 044 - 2485 3333, 96888 77700.
E-mail Id : reddymalar06@gmail.com,
Website : www.reddymalar.com,
Twitter : @malar_reddy.twitter.com
Matrimony Online Website :
www.reddymatrimony.co.in
Subscribe : YouTube : oprchannel
http://youtube.com/@oprchannel1157

# வரலாற்றை அறிவோம்! பாராட்டுவோம்

## தலையங்கம்

**ஸ்தல புராணம் இல்லாத ஆலயங்கள் !**

**ஜாதகங்கள் இல்லாத நதிகள்!**

**யோகங்களில்லாமல் பிறக்கும் ஞானங்கள்!**

**எதார்த்த மில்லாத சொற்சித்திரங்கள்!**

மதிப்பும், மரியாதையையும் பெருவதில்லை. தமிழகத்தைப் பொறுத்தவரை ரெட்டி சமூகம் இந்த வரிசையில்தான் இருந்து வருகிறது. ஏறத்தாழ 600 ஆண்டுகளுக்கும் மேலாக நாம் தமிழகத்தில் வாழ்கிறோம். ஆனால் நமக்கொரு வரலாற்றுக் குறிப்பு இல்லை.

நம்மை 'யார்'? என அறிமுகப்படுத்திக் கொள்ள, அடையாளம் காட்டிக்கொள்ள நமது முன்னோர்கள் குறிப்பேதும் விட்டுச்செல்லவில்லை.

சத்திரங்கள் கட்டினர், சாவடிகள் கட்டினர், பள்ளிகள் எழுப்பினர், ஆலயத்திருப்பணிகள் செய்தனர், சாலைகள் கூட போட்டனர். ஆனால் தமது பாரம்பரியத்தன்மையை பறைச்சாற்றும் வரலாற்று சாதனைகளை பதிவு செய்வதுபற்றி எவரும் அக்கறை கொள்ளவில்லை.

ரெட்டி சமூக பிரமுகர்கள் தனிமனித செல்வாக்கை முன்னே வைத்து சமூக பெருமையினை வெளிப்படுத்த தவறிவிட்டனர் என எண்ணத் தோன்றுகிறது.

நமது சமூகத்தின் வளர்ச்சிக்கென பல பத்திரிக்கைகள் வெளிவந்தன. அவைகளும் நமது பூர்வீகத்தைப் பற்றியும், நமது சமூக வளர்ச்சிப்பற்றியும் முக்கியத்துவம் அளிக்கவில்லை. அன்றைய நம் சமூக பெருமைக்கு வளர்ச்சி பணிகள் தேவையில்லாமலும் இருந்திருக்கலாம்.

நம் இன மக்கள் சுய தேவைகளுக்காக சங்கத்தை நாடுவதும்,சலுகைகளுக்காக சங்கத்தை உருவாக்குவதும், அதன்பின் சங்கத்தைப் பற்றிய சிந்தனை இல்லாது இருப்பதும் ரெட்டி சமூகத்தின் நடைமுறையாக இருந்து வருகிறது.

இன உணர்வு, புதிய தொடர்புகள், ஒன்றுபடுகின்ற மனோபாவம், பரஸ்பர ஒத்துழைப்பு இவைகள் நமக்கு எப்போதும் தேவை. அதனை பெற்றுத்தர ஒரு வலுவான சங்க அமைப்பும் வேண்டும். இதன் அவசியத்தை அடையாளமாக உணராமல் தேவையானபோது சங்கங்களை தோற்றுவிப்பதும் தேவை முடிந்தவுடன் அவைகளை அனாதையாக்கி விடுவதும் மாமூலாகிவிட்டது.

இதற்கு பல காரணங்களுள் முக்கியமானவை மொழியை மறந்தது, மற்றொன்று நமக்கு சரித்திரம் இல்லாதது. விவசாய தொழிலுக்கு மரியாதை இருந்தவரை ரெட்டிகள் கல்வி, உத்தியோகம், சலுகைகளைப் பற்றி கவலைப்படவில்லை. இன்று வரை இவர்கள் எந்த பெரிய உத்தியோகத்திலும் தமிழ்நாட்டில் இல்லை.

குலத்தாலும், கோத்திரத்தாலும் பிரிக்கப் பட்டிருந்தாலும் ஏற்றத்தாழ்வினை தோற்றுவிப்பது பொருளாதார நிலை. சுதந்திரமாக வாழ எல்லா இனத்தவரும் விரும்புவதைப்போல ரெட்டியார்களும் இருக்கவே விரும்புகிறார்கள். எனவே, நமது உரிமைகளை வற்புறுத்த ஒன்றுபட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

விவசாயம் நலிந்தப்பின் வாழ்வதற்கான புதிய வழிமுறைகளைத் தேர்ந்தெடுப்பது அவசியமானது. அவசியம் ஏற்பட்ட பிறகே அதற்கான முயற்சிகளும் செய்யப்படுகின்றன. இந்த குறைகளுக்கு நமது முன்னோர்களின் மீது பழியைப் போட்டு தப்பித்துக் கொள்ள முயற்சிக்கக் கூடாது. நமக்கும் பொறுப்பு உண்டு. முயற்சிப்போம், புதிய வாழ்வழித்தடங்களில் பயணிக்க முயலுவோம்.

அடுத்து வரலாற்று குறிப்பு பதிவுகளுக்கு வருவோம். நம்மில் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், புலவர்கள், பேச்சாளர்கள் இல்லாமல் இல்லை. இருந்தும் ஒரு வரலாற்றை கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப் படவில்லை. இவ்வெற்றிடத்தை நிரப்ப **"தமிழக ரெட்டிகள் வரலாறும், இன்றைய நிலையும்"** என்கிற நூல் கடந்த 2005 ஆம் ஆண்டு **திரு.வீ.செல்வராஜு** அவர்களால் வெளியிடப் பட்டது. முதல் முயற்சியாக வெளியிடப்பட்ட இந்த நூலில் விரிவான, ஆழ்ந்த கருத்துகள் முழுமை பெற்றதாக இல்லை.

இதனை சரிசெய்யும் நோக்கில் தெற்கு முனை முதல் திருத்தணி வரை உள்ள சுமார் 5000 கிராம ரெட்டியார்களுக்கும் அறிமுகமான திரு.வீ.செல்வராஜு அவர்கள் கிராமம், கிராமமாக பெரும்பகுதி ரெட்டியார்கள் வாழும் பகுதிகளுக்குச் சென்று **"தமிழ்நாட்டில் ரெட்டியார்களின் சமூக –கலாச்சாரம் மற்றும் அரசியல் வரலாறு ஓர் ஆய்வு"** என்ற தலைப்பில் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் கடந்த 12 ஆண்டுகால இடைவிடாமுயற்சியுடன் செய்த ஆய்வினை சமர்ப்பித்து முனைவர் (டாக்டர்) பட்டம் பெற்றுள்ளார்.

தமிழகத்தின் தலைசிறந்த சமூகங்களில் ஒன்றான ரெட்டியார் சமூகத்திற்கு வரலாறு இல்லை என்ற குறையை போக்கும் முயற்சியில் உருவானதுதான் இந்த வரலாற்று ஆய்வு. ரெட்டியார் சமூகம் அரசாட்சி செய்த சமூகம் என்பதை வரலாற்றில் காணலாம்.

இடைக்கால தென்னிந்தியாவின் குறிப்பாக ஆந்திரப்பிரதேசம், தெலுங்கானா மற்றும் தமிழ் நாடு பகுதிகளில் ரெட்டியார்கள் முக்கியப்பங்கு வகித்தனர். பல்வேறு வம்சங்கள் மற்றும் உள்ளூர் தலைவர்களின் உருவாக்கத்தில் அவர்கள் செல்வாக்கு செலுத்தினர் என்பதை வரலாறு சொல்லுகிறது.

மேற்கண்ட ஆய்வில் அவரது முக்கியக் குறிக்கோளாகக் கொண்டவை :– ஆங்காங்கே சிற் சிறு குழுமங்களாக பரவியிருக்கும் ரெட்டி இன மக்களை ஒருங்கிணைத்து அவர்களின் இன சிறப்பு, மரபுகளை வெளிப்படுத்தி இனத்திற்கான சிறப்பை மீட்டெடுப்பதுவே இவ்வாய்விற்கான முதன்மைக் குறிக்கோள் என குறிப்பிட்டுள்ளார்.

- ☞ ரெட்டியார் இன பழங்கால மரபுகளை மதிப்பீடு செய்து வெளிக்கொணர்தல்
- ☞ ரெட்டி இன மக்களின் சமூக மற்றும் கலாச்சார பழக்கவழக்கங்களை விவரித்திடல்.

ரெட்டியார் சங்க அமைப்புகளின் பயன்பாடு மற்றும் சமகால சூழலில் ரெட்டியார் இன மக்களை ஒருங்கிணைத்து செயல்படவைப்பது இவரது குறிக்கோள் எனவும், சமுதாயத்தை உயர்த்துவதற்கு அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு துணையாக சாதி சங்கம் அவசியம் எனவும் தன் நோக்கத்தை குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்கது. பாராட்டுவோம்.

R. இராஜசேகரன் ஆசிரியர் குழு

# ரெட்டி இளைஞர் பேரவை

அலுவலக முகவரி : எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை, சென்னை – 600 083.
044 - 2485 3333, 96888 77700. E-mail Id : reddymalar06@gmail.com
Website : www.reddymalar.com, Twitter : @malar_reddy.twitter.com, website : www.reddymatrimony.co.in




**V.செல்வராஜூ**
**நிறுவனத்தலைவர்**

## நிறுவனத்தலைவர் மடல்.....

**அ**ன்பு உறவுகள் அனைவருக்கும் பணிவான வணக்கங்கள்.

**பாரத பிரதமர் நரேந்திர மோடி** அவர்கள் தொடர்ந்து மூன்றாவது முறையாக பிரதமராக பதவியேற்றதற்காக ஓ.பி.ஆர் நினைவுத்தொண்டு அறக்கட்டளை, ரெட்டி இளைஞர் பேரவை மற்றும் ரெட்டி மலர் சார்பாக வாழ்த்துகிறோம். தனி பெரும்பான்மை கிடைக்காத சூழ்நிலையில் தேசிய ஜனநாயக கூட்டணியுடன் இணைந்து கடந்த ஜூன் 9, 2024 அன்று புதுதில்லியில் உள்ள ராஷ்டிரபதிபவனில் புதிய NDA அமைச்சரவை பதவியேற்றுள்ளது. புதிய அரசாங்கம் தேசிய பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு போன்ற முக்கியப்பிரச்சனைகளில் கவனம் செலுத்திடவும், பெரும்பாலான ஏழை, எளிய மக்கள் பங்குவகிக்கும் விவசாயத்துறையில் சிறப்பு கவனம் செலுத்திடவும், அனைத்துத் துறைகளிலும் இந்தியா வெற்றிக் காணவும் வேண்டுகிறோம், வாழ்த்துகிறோம்.

**ந**டைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் பெரம்பலூர் தொகுதியில் வெற்றிப்பெற்றுள்ள **திரு.K.N.அருண்நேரு** அவர்களுக்கும், புதுச்சேரியில் வெற்றிப்பெற்றுள்ள **திரு.V.வைத்தியலிங்கம்** அவர்களுக்கும் ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை, ரெட்டி இளைஞர் பேரவை மற்றும் ரெட்டி மலர் சார்பாக வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**“தமிழ்நாட்டில் ரெட்டியார்களின் சமூக–கலாச்சாரம் மற்றும் அரசியல் வரலாறு ஓர் ஆய்வு”** என்கிற தலைப்பில் முதன் முதலாக ரெட்டியார்களைப் பற்றி ஆய்வு செய்த **திரு.வீ.செல்வராஜ்** அவர்களுக்கு (எனக்கு) திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் **டாக்டர் பட்டம்** வழங்கியுள்ளது.

**மே**ற்காணும் ஆய்வின் முக்கியத்துவத்தினை இங்கு காண்போம். கடந்த 09.11.1995 அன்று ரெட்டி கஞ்சம் பிரிவை இதர பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் (OBC) சேர்க்க வலியுறுத்தி வழங்கப்பட்ட கோரிக்கையின் விளைவாக 21.10.1997 அன்று பொது விசாரணையை தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தால் நடத்தப்பட்டு பின்னர் இந்தக் கோரிக்கை 18.03.1998 அன்று NCBC-யால் நிராகரிக்கப்பட்டது. அதுசமயம் நிராகரிக்கப்பட்ட கடிதத்தில் ரெட்டி கஞ்சம் பிரிவினர் சமூகரீதியாகவும், கல்விரீதியாகவும் பின்தங்கியவர்களாக காணப்படவில்லை எனவும் மேலும் ரெட்டியார்கள் பற்றிய வரலாற்று நூல்கள், இலக்கிய சான்றுகள், ஆய்வு அறிக்கைகள் இல்லை என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதற்கு தமிழக அரசு A.N.சட்டநாதன் தலைமையில் அமைந்த குழு வழங்கிய அறிக்கையில் தொகுதி 2 பக்கம் 64, 65-ல் ரெட்டி கஞ்சம் இன மக்கள் சமூக, பொருளாதார அந்தஸ்தில் உயர்ந்தவர்கள் என்பதை காரணம் காட்டியது. இதன் அடிப்படையில் OBC கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது என NCBC கடிதம் மூலம் தெரிவித்தது. இதனை கருத்தில் கொண்டு முதல் முறையாக **“தமிழக ரெட்டிகள் வரலாறும், இன்றைய நிலையும்”** என்கிற நூலினை வெளியிட்டு நம் நிலையினை விளக்கி பல்வேறு குறிப்புகள் அடங்கிய வரலாற்று நூல் வெளியிடப்பட்டது.

**தொ**டர்ந்து 06.09.2006 மற்றும் 04.02.2008 ஆகிய தேதிகளில் மத்திய அரசுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் OBC பட்டியலில் ரெட்டி கஞ்சம் பிரிவை சேர்க்க வலியுறுத்தினார். தொடர்ந்து 08.07.2011 அன்று தமிழ்நாடு அரசின் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் மூலம் அழுத்தம் தரப்பட்டு நிராகரிக்கப்பட்ட கடிதத்தை தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் மறு ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது. இதன் அடிப்படையில் 5 மற்றும் 6.9.2011 ஆகிய தேதிகளில் பொது விசாரணையை நடத்தியது. அதுசமயம் தமிழ்நாடு ரெட்டி நலச் சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்தபோது, நம் ரெட்டி இன மக்களின் குடும்ப புள்ளிவிவரங்கள், புகைப்படங்கள், அரசாங்கப் பதிவுகள், ஆணைகள், கடிதங்கள், ஆவணங்கள் என பல்வேறு ஆதாரங்களுடன் பொது விசாரணையை 5 உயர்நீதிமன்ற வழக்கறிஞர்களுடன் சமர்ப்பித்தோம். அதன் பிறகும் நமது கோரிக்கை மேற்சொன்ன காரணங்களை சொல்லி மீண்டும் NCBC நிராகரித்தது.

**இ**ந்த சூழலில் ரெட்டி சமூகத்தைப் பற்றிய ஆய்வு தேவை என்பதை உணர்ந்து NCBC தெரிவித்த நம் குறைகளை களையும் நோக்கில் 2012 முதல் 2024 வரை 12 ஆண்டுகள் தொடர்ந்து திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் **“தமிழ்நாட்டில் ரெட்டியார்களின் சமூக–கலாச்சாரம் மற்றும் அரசியல் வரலாறு ஓர் ஆய்வு”** என்கிற தலைப்பில் ஆய்வு செய்து சமர்ப்பிக்கப்பட்டதை தொடர்ந்த கடந்த 03.06.2024 அன்று வெளிநாட்டு வரலாற்று ஆய்வாளர்கள், பிற மாநிலத்தில் உள்ள வரலாற்று ஆய்வாளர்கள் என பலராலும் ஆய்வு செய்யப்பட்டு பொதுமக்களின் வாய்மொழித் தேர்வுக்கு உட்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வினை ஏற்றுக் கொண்ட திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் எனக்கு டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது. இந்த ஆய்வுக்கு உதவிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் நன்றி.


**ம**த்திய, மாநில அரசுகளிடமிருந்து நமக்கு உரிய உரிமைகளை பெறுவதற்கு மட்டுமின்றி பலரும் பாராட்டும் நம் கலாச்சாரப் பண்புகளை வருங்கால சந்ததியினர் அறியும் வகையில் ரெட்டியார் சமுதாயம் குறித்து மேலும் பல தலைப்புகளில் ஆய்வுகளை செய்து உண்மையை வெளிக்கொண்டு வர வேண்டும் என்பதே என் அவா. வரலாற்று ஆய்வுகள் குறித்து இளைய தலைமுறையினரிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவோம்.

**அ**டுத்த இதழில் சந்திப்போம். நன்றி.

என்றென்றும் சமுதாய உணர்வுடன்,

**V. செல்வராஜ்**

**நெய்வேலி பழுப்பு நிலக்கரி சுரங்க நிலம் கையகப்படுத்துவதிலிருந்து விலக்கு**



நெய்வேலி பழுப்பு நிலக்கரியை வெட்டி எடுப்பதற்கு அறிவிக்கப்பட்ட ஊர்களின் பட்டியலில் 67 ஊர்கள் இருந்தன. ஓமந்தூரார் வேண்டுகோளுக்கு இணங்க 35 கிராமங்கள் நீக்கப்பட்டன. எனினும் சுரங்க வேலை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட எஞ்சிய கருங்குழியும் வடலூரும் சேர்ந்திருந்தன. இவ்வூர்களையும் சுற்றுப்புறத்தையும் கையகப் படுத்த வேண்டாம் என்று ஓமந்தூரார், சென்னை அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார். இதுகுறித்து அரசு உடனடியாக ஆணை எதையும் பிறப்பிக்கவில்லை. தாம் கிளர்ச்சி செய்ய நேரும் என்று ஓமந்தூரார் அன்றைய முதலமைச்சர் இராஜாஜிக்கும் தலைமை அமைச்சர் ஜவஹர்லால் நேருவுக்கும் எழுதினார். இதைத் தொடர்ந்து அவர்கள் நடவடிக்கைகள் எடுக்க முனைந்தனர். எனினும் அரசின் ஆணை 1958இல் தான் பிறப்பிக்கப்பட்டது. இடைப்பட்ட காலத்தில் ஓ.பி.ஆர் இதுசம்மந்தமாக தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித்தலைவரை சந்தித்தும் மேலவையில் கேள்வி எழுப்பியும் பிரச்சனையை அரசின் கவனத்திற்கும் கொண்டு வந்தவண்ணமாக இருந்தார்.

மேட்டுக்குப்பம் கிராமத்துக்கும் வடலூர் எல்லைக்கும் இடைப்பட்ட பகுதியில் பழுப்பு நிலக்கரிக்கு மேலும் கீழும் தண்ணீர் இருப்பதையும், அந்தப் பகுதியில் நிலக்கரி 30 அடி கனத்திற்கு மட்டும் உள்ளதையும், சுத்த சன்மார்க்க நிலையத்து தோட்டங்கள் அங்குப் போடப்பட்டிருப்பதையும் ஓமந்தூரார் சுட்டிக் காட்டினார்.

அரசாங்கத்தார் நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பரேசனுக்கு இதுகுறித்து எழுதினர். ஆனால் அப்போது நிர்வாக இயக்குநராக இருந்த திரு.டி.என்.எஸ்.மணி ஐ.சி.எஸ். பின்வருமாறு அரசுக்குப்பதில் எழுதிவிட்டார். “சில ஆண்டுகளுக்குப் பின்னர் சுரங்கம் வெட்டும் அறிவியல் துறை மேலும் வளர்ச்சியடைந்து, இப்பகுதியை வெட்டுவது இலாபகரமாக இருக்கலாம் என்ற எண்ணம் உண்டாகக்கூடும். எனவே இப்போதே இந்த ஊர்களையும் ‘அக்குயர்’ செய்து விடுவதே நல்லது. அப்படிச் செய்யா விட்டால், பலர் கட்டடங்களைக் கட்டிவிடுவார்கள். அவற்றுக்கெல்லாம் சேர்த்து நஷ்டஈடு கொடுக்க நேரிடும், நஷ்டஈட்டுத் தொகையும் பெருகும்”.

ஓ.பி.ஆர் கொண்ட உறுதியால், அரசாங்கம் திரு.டி.என்.எஸ்.மணியின் யோசனையைப் புறக்கணித்து, பழுப்பு நிலக்கரிச்சுரங்கம் வெட்டுவதற்காக நிலங்களை அக்குயர் செய்ய அரசாங்கத்துக்கு அதிகாரம் அளிக்கும் 1953ஆம் ஆண்டு சட்டத்தினின்றும் கருங்குழி, மேட்டுக்குப்பம் கிராமங்களை விடுவித்து ஆணையிட்டது.

**வடலூர் கடலூர் ஆகிறது**

ஓ.பி.ஆரின் முயற்சியால் பின்வரும் நிறுவனங்கள் வடலூரில் ஏற்பட்டுள்ளன.

1. ஆரம்ப சுகாதார நிலையம்.
2. கால்நடை மருத்துவனை
3. பெரிய அஞ்சலகம், தந்தி நிலையம்
4. (அரசாங்க) ஆசிரியப் பயிற்சிப் பள்ளி
5. அம்பர் சர்க்கா நிலையம் (சரஞ்சன் காரியாலயம்)
6. குஷ்ட நோய் நிவாரண நிலையம்
7. மின்சார வசதி
8. போலீசு நிலையம்

சேஷசாயி இன்சுலேட்டர்ஸ் லிமிடெட், நெய்வேலி செராமிக் என்ற இரு தொழிற்சாலைகளும், வடலூரில் அமைந்ததற்குப்பொறுப்பு ஓ.பி.ஆர் ஆவார்.

சேஷசாயி இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் [எஸ்.ஐ.எல்] தொழிற்சாலையில், மின்சாரம் விநியோகங்களில் இன்றியமையாத இன்சுலேட்டர்களைத் தயார் செய்கிறார்கள்.

இந்த நிலையம் 4.12.1958இல் திறக்கப்பட்டது. ஆரம்பச் செலவாகக் கட்டடங்களுக்கு ரூ.20,000 செலவு செய்யப்பட்டது. இதில் நான்கில் ஒரு பங்கு ரூ.5000, சுத்த சன்மார்க்க நிலையமும், சுப்பிரமணியபுரம் திரு.எஸ்.திருவடியாபிள்ளை அவர்களும் வழங்கினர். அதனாலேயே ஆரம்ப சுகாதார நிலையத்தை வடலூரில் அமைக்க அரசு இசைந்தது.

நெய்வேலி செராமிக்ஸ் அண்டு ரிப்ராக்டரீஸ் லிமிடெட் என்னும் தொழிற்சாலை மேற்கு ஜெர்மனியிலுள்ள செராமிக் நிறுவனத்துடன் தொழில்நுட்பக் கூட்டுறவு உடன்பாடு செய்து கொண்டு நடைபெறுகிறது. வீடுகள் தூய்மையாக இருப்பதற்கு இன்றியமையாத சுகாதார வசதிப் பொருள்கள் இங்கு தயாரிக்கப்படுகின்றன.

இந்த இரு நிறுவனங்களையும் திருச்சி சேஷசாயி குழுவினர் ஓமந்தூராரின் ஆலோசனைப்படியே வடலூரில் அமைத்தனர்.

இத்தகைய தொழில்வளர்ச்சியின் விளைவாக நேரடியாகவும், மறைமுகமாகவும் ஈராயிரம் தொழிலாளர்கள் இவ்வூரில் வேலை பெற்றனர். சேராக்குப்பம், ஆபத்தாரணபுரம், பார்வதிபுரம் ஆகிய மூன்று ஊராட்சி மன்றங்கள் இணைந்த வடலூர் பேரூராட்சி ஏற்படலாம். விரைவில் இது நகராண்மைக்கழக நிலைபெறக்கூடும். எனவே வள்ளலார் கூறியவாறு, வடலூர், கடலூராகும் நாள் விரைவில் வரவிருந்தது.இந்த மாற்றத்திற்கு ஓ.பி.ஆர் ஒரு கருவியாகத் திகழ்ந்தார்.

**மேட்டுக்குப்பம்**

வடலூருக்குத் தெற்கே 2 கி.மீ தொலைவில் உள்ளது மேட்டுக்குப்பம்.

வள்ளற்பெருமான் சித்தி பெற்ற இடம் இது.



அவர் திருக்காப்பிட்டுக் கொண்டு, சித்தி பெற்ற பின்னர் ஆண்டுக்கு ஒரு நாள் (தைப்பூசத்தின் மூன்றாம் நாள்) திறந்து வழிபடப்பெறுகிறது. இங்கு ஆண்டுதோறும் ஐப்பசி மாதம் ஏழாம் நாளில் கொடி ஏற்று விழா நடைபெறுகிறது.

இந்தியன் வங்கியின் தலைமை அலுவலகத்தில் வேளாண்மை நிதித்துறையின் தலைவராக இருந்த திரு.சுந்தரேசன் ஓ.பி.ஆர். வாழ்வில் கடைசிப் பத்தாண்டுகளில் அவரை அடிக்கடி சந்தித்தார். அவருடைய நட்புக்குப்பாத்திரமானார். அவர் பின்வரும் ஒரு நிகழ்ச்சியை சோமலெ வசம் கூறினார்.

'1959இல் நான் மேட்டுக்குப்பத்துக்குப் போயிருந்தேன். சேலம் திரு.பெருமாள் செட்டியார் அங்கு ஒரு தகரக்கூடாரம் போட்டிருந்தார்கள். அதில் வேலை இல்லாதவர்கள் பலர் கண்டதெல்லாம் பேசி, அந்த இடத்தின் தூய்மையைக் கெடுத்து வந்ததோடு வள்ளலார் பக்தர்களுக்கு இடையூறாகவும் இருந்தனர்.

முன்பின் பழக்கமில்லாத நான் வடலூருக்குப் போய், ஓ.பி.ஆர். அவர்களிடம் இதைச் சொன்னேன். உடனே அவர் போலீசுக்குத் தகவல் கொடுத்தார். மறுநாள் முதல் அந்த இடத்தில் ஈ. காக்கை கூட வரவில்லை'.

## சன்மார்க்க சங்கங்கள்

மாவட்டம் தோறும் சன்மார்க்க சங்கங்கள் இயங்க வேண்டும். அவற்றின் கட்டடங்கள் வடலூரில் கட்டப்படவேண்டும் என்றெல்லாம் ஓ.பி.ஆர் விரும்பினார்.

வடலூர் விருத்தாசலம் நெடுஞ்சாலையில் ஓ.பி.ஆர் தம் பணத்திலிருந்து நிலங்கள் வாங்கி ஒவ்வொரு மாவட்டத்துச்சங்கத்தாருக்கும் அன்பளிப்பாக வழங்கினார். அவர்கள் அந்த மனையிடங்களில் கட்டடங்கள் கட்டி, மெய்யன்பர்களுக்கு வள்ளலாரின் கருத்துகளை வழங்குவதோடு பசியையும் தீர்க்கவேண்டும் என்று எதிர்பார்த்தார்.

சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விழாவுக்குக்கோயம்புத்தூருக்கு ஓ.பி.ஆர். சென்றிருந்தார். அப்போது மாகாண சமரச சன்மார்க்க மாநாடும் நடைபெற்றது. அம்மாநாட்டில், ஓ.பி.ஆர் இந்த நிலதானங்களை செய்தார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சன்மார்க்க சங்கமும் தலைவர், செயலாளர், உறுப்பினர்கள் விவரம் கொண்ட பதிவேட்டைக் காட்டினால் 6 சென்ட் நிலம் வழங்கினார் ஓ.பி.ஆர்.

ஓமந்தூராருக்கு நிபந்தனைகளைத் சொல்வதில் தயங்கியது கிடையாது. எனவே நிபந்தனைகளோடு இவர் நிலம் வழங்கியதில் வியப்பில்லை. இவர் குறிப்பிட்ட நிபந்தனைகள் வருமாறு,

1. மேற்படி நிலத்தில் கட்டடம் கட்டிப் பயன் படுத்திக்கொண்டு இராமலிங்க அடிகளின் கொள்கைப்படி சன்மார்க்கத்தொண்டு செய்யவேண்டும்.
2. சங்கத்தார் தங்கலாம், சங்கப்பணிககளைச் செய்யலாமே தவிர மேற்படி இடத்தை வாடகைக்கோ கிரயத்திற்கோ கொடுக்கக் கூடாது.
3. இராமலிங்க சுவாமிகளின் நோக்கங்களுக்கு மாறான காரியங்களுக்குப் பயன்படுத்தக் கூடாது.
4. மேற்காணும் நிபந்தனைகளுக்கு மாறாக நடந்தால் இந்தப்பத்திரம் செல்லத்தக்கதல்ல.

ஓ.பி.ஆர் இரங்கூன் (பர்மா) சன்மார்க்க சங்கத்துக்காக குங்கிலியம் திரு.பழ.சண்முகனார்க்கு ஆறு சென்ட் நிலம் தானம் செய்ய முன்வந்தார்.

திரு.சண்முகனார் அதை வாங்கிக் கொள்ள மறுத்தார். அவர் கூறிய காரணம், "நான் பர்மாவில் இல்லை, தாய்நாட்டில் தமிழ்நாட்டில் இருக்கிறேன்".

"ஏன் ஐயா, குறிஞ்சிப்பாடியிலிருந்து பத்திரம் பதிகிற உதவிப்பதிவாளரை இங்கு அழைத்து வரச்செலவும் பத்திரச்செலவும் ஆகும் என்றா தப்பிக்கிறாய்? நீ நகரத்தார் அல்லவா? செட்டு (செலவு மிச்சம்) பார்க்கிறாயா? நகரத்தார் ஒருவர், இந்த அறக்கட்டளைகளில் கட்டாயம் இருக்க வேண்டும். பத்திரம் எழுதி முடித்துக்கொண்டு பதிவாளரைக்கூட்டி வா, ஐயா" என்றார் ஓமந்தூரார்.

"நான் செலவு பற்றிச் சிந்திக்கவில்லை. இன்ன இன்ன விவரம் காட்டும் சங்கங்களுக்கு நிலம் கொடுப்பது என்று நீங்களே சட்டம் வகுத்திருக்கிறீர்கள். நீங்கள் வகுத்த சட்டத்தை நீங்களே மீறலாமா? என்று உங்களை யாராவது கேட்டால்..." – குங்கிலியம்.

கேட்டால் சமாதானம் நான் சொல்லவில்லை, நீங்கள் சொல்லுகிறீர்களா? – ஓ.பி.ஆர்.

குங்கிலியம் சொன்ன பதில்,

**"அரவகல் அல்குலார்பால் ஆசை**
**நீத்தவர்க்கே தருவம் என்று**
**அளவல் வேதம் சாற்றிய தலைவன்**
**தன்னை பரவைதன் புலவி தீர்ப்பான்**
**கடுதுகண்படுக்கும் பாழ்நாள்**
**இரவினில் தூது கொண்டோன்**
**இணையடி முடிமேல் வைப்பாம்"**

என்பது திருவிளையாடற்புராணத்தில்,

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி. பெண்கள்பால் ஆசை நீத்தவர்களுக்கு மோட்ச(வீடு)ம் அளிப்பதாக வேதத்தில் சொன்ன இறைவனையே பரவை, நாச்சியார்பால் தூது விடுத்தோனான சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பாதாரவிந்தங்களைச் சிரசின்மேல் தாங்குவோம் என்கிறார் ஆசிரியர் பரஞ்சோதி முனிவர்.

சட்டம் வகுத்தவன் இறைவன். அவனே சட்டத்தை மீறுகிறான். அதை ஏன் என்று நாம் கேட்க அருகதை இல்லை. நமது வரட்டு அறிவு எதை எதையோ ஆய்வு செய்கிறது. ஆய்வு வேண்டியதுதான். அளவோடு நின்றுவிட வேண்டும். தெரியாதது எவ்வளவோயிருக் கின்றன அதன் உண்மை தெரியும் வரை, கமா போட்டு வைத்து காத்திருக்கவேண்டும். ஆனால், நாம் ஒரு முடிவுக்கு வந்து மேலே போக வழி தெரியாது. புல்ஸ்டாப் போட்டு மேடைகளிலும் பேசி, நூல்களிலும் பத்திரிக்கைகளிலும் வெளியிட்டு விடுகிறோம். ஞானசம்பந்தர் திருவாய் மலர்ந்த திருக்காடைக்காப்பில் எடுத்த மொழியாலும் ஏதுக்களாலும் மிக்க சோதிக்க வேண்டாம்” என்று. இதில் மிக்க சோதிக்க வேண்டாம் என்பது நாம் கருத்தில் கொள்ள வேண்டும். ஆனால் ‘மிக்க’ என்பதை விட்டு விட்டு சோதிப்பதிலேயே நாட்டம் கொண்டு ஆழ்கிறோம். குதிரை செய்யக்குரங்கு காண்கிறோம். இப்படிக்குரங்கு காண்பவர்கள் ஏதோ ஒரு வகையில் பிரசித்திப் பெற்றிருக்கக் கூடும். இந்தப் பிரசித்தியை வைத்து அவர் சொல்வதெல்லாம் வேதவாக்கு என பிறர் முடிவுக்கு வந்து பின்பற்றி

“குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடும் குருடும் குழிவிழுகிறார்கள்
[திருமந்திரம்].

ஓ.பி.ஆர். இதைக் கேட்டு இரசித்தார். ஆனால் “இது புராணமாக இருக்கிறது. நடைமுறை உதாரணம் ஏதாவது சொல்லமுடியுமா? என்றார் ஓ.பி.ஆர்.

எவ்வளவோ சொல்லலாம். ஆனால் ஒன்று மட்டும் சொல்லுகிறேன். நகரங்களில் பல சாலை கள் கூடும் இடங்களில் சந்திப்புக்களில் பச்சை சிவப்பு ஒளிவிளக்குகள் வைக்கப்பெற்று அதன்படி ஊர்திகள், கைகாட்டி ஆள் இல்லாமலே சென்றும் நின்றும் வருகின்றன. அந்த வழியில் குடியரசுத் தலைவர் செல்லுகிறார் அல்லது பெரிய ஊர்வலம் செல்லும் எனின், உரிய விளக்குக்குத் திரை போட்டு மூடிவைத்து விடுகின்றனர். போக்குவரத்தைக் கட்டுப்படுத்த கைகாட்டும் போலீசாரை நிறுத்துகின்றனர். அரசாங்கம் இப்படிச்செய்வது சரியா என்று ஒரு—வரும் கேட்பதில்லையே’ என்றார் திரு.குங்கிலியம் பழ.சண்முகனார்.

சுவையான இந்த உரையாடல் நடந்த மறுநாள் பத்திரம் பதிவு செய்யப்பெற்றது.

**பரங்கி, பூசணி களவு**

குருகுலத்து மாணவர்களுக்காக ஓ.பி.ஆர். பரங்கி, பூசணி போட்டு வைத்திருந்தார். களவு போய்விட்டது. விடுதியில் வேலை பார்த்த எழுத்தரை அழைத்து, காவல் நிலையத்தில் புகார் பதிந்து வைத்து விட்டு வரச் சொன்னார்.

‘ஏன் ஐயா பரங்கியும் பூசணியும் களவு போவதைப் பிடிக்கத்தான் காவல்நிலையம் வைத்திருக்கிறோமா? சரிதான் போங்க ஐயா’ என்று காவல் நிலையத்து உதவி ஆய்வாளர் கூறி விட்டார். 10 நாட்களுக்குப்பிறகு கடலூரிலிருந்து மாவட்டக் காவல் துறைத்தலைவர், ஓ.பி.ஆரைக் காண வந்தார்.

‘ஐயா, தாங்கள் முதலமைச்சராக இருந்தபோது தான் எனக்குப் பதவி உயர்வு கொடுத்தீர்கள். நான் இப்போது இந்தத் தென்னார்க்காடு மாவட்டத்திற்கு மாற்றப்பட்டு நேற்று பதவி ஏற் றேன். முதல் வேலையாகத் தங்கள் ஆசீர்வாதம் பெற இங்கு வந்தேன்” என்றார்.

பெரிய அதிகாரியான நீங்கள் என்னிடம் இவ்வளவு மரியாதை வைத்திருக்கிறீர்கள். ஆனால் சிறு பதவிகளில் இருப்பவர்கள் சற்றும் என் வார்த்தையை மதிப்பதில்லை. இங்கு ஏழைப் பிள்ளைகளை வளர்த்து வருகிறேன். அவர்கள் சாப்பிடுவதற்காக பூசணியும் பரங்கியும் பயிரிட்டுள்ளேன். இது திருட்டுப்போயிற்று. காவல்நிலையத்தில் சொல்ல ஏற்பாடு செய்தேன். “பெரிய கேஸ் கொண்டு வந்து விட்டார்கள் என்று கேலிசெய்கிறார்களாம்” என்றார் முன்னாள் முதலமைச்சர். உடனே டி.எஸ்.பி. மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தார். தம் கார் ஓட்டியிடம் சொல்லி, வடலூர் காவல்நிலையத் தில் பணிபுரியும் அத்தனை பேரையும், குரு குலத்தில் ஓ.பி.ஆர். ஆசிரமத்தின் முன்வந்து நிறுத்தச் சொன்னார்.

முன் அறிவிப்பு இல்லாமல் டி.எஸ்.பி. புதிதாய்ப் பதவி ஏற்றவர் திடீரென்று வந்து தனியார் ஒருவர் தோட்டத்துத் தங்களை அழைத்தது அவர்களுக்குப் புதிராக இருந்தது. அவசர அவசரமாக முகங்களைத் தீட்டிக்கொண்டு மாவட்டக் காவல் துறைத் தலைவர் முன்னிலையில் நின்றனர்.

ஓ.பி.ஆரைப் பற்றி அவர்களுக்கு டி.எஸ்.பி ஒரு சிறு உரை நிகழ்த்தினார். அந்தப் பெரியவருடைய வார்த்தைகளை மதித்து நடக்க வேண்டும். இரண்டு நாட்களுக்கும் எப்படியும் பூசணி, பரங்கி திருடியவர்களைப்பிடித்தாக வேண்டும் என்று கண்டிப்பான ஆணையிட்டார்.

பிறகு டி.எஸ்.பி மாடிக்குச் சென்றார். ஐயா என்னுடைய ஆட்கள் இனி ஒழுங்காக நடந்து கொள்வார்கள். தக்கநடவடிக்கையை உடனே எடுப்பார்கள். நான் இந்த மாவட்டத்திலிருந்து வேலைமாறுதலாக புதியவரிடம் பொறுப்பு ஒப்படைக்கும் போது தங்களைப்பற்றி சொல்லி விட்டுப் போவேன், கவலை வேண்டாம்” என்று கூறி விடை பெற்றார்.

பின்னர் போலீசார் தக்க நடவடிக்கை எடுத்தனர் என்பதைச் சொல்லவேண்டிய தில்லையே!

இன்னும் வளரும்.......

**தொகுத்தவர் வீ.செல்வராஜூ**

ஆதாரம் : ஆர்.பி.சங்கரன் எழுதிய நூலிலிருந்து

# சத்தியமங்கலம் பகுதியில் போட்டித் தேர்வுகளுக்கான விழிப்புணர்வு முகாம்





கடந்த 05.05.2024 அன்று விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம், சத்தியமங்கலம் பகுதியில் ஓபிஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை சார்பில் போட்டித் தேர்வுகளுக்கான இலவசப்பயிற்சி அறிமுக விழா நடைபெற்றது. இதில் KRT கேரியர் அகாடமி நிர்வாக இயக்குநர் திரு.V.செல்வராஜு, ஓபிஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை அறங்காவலர்கள் திரு.V.ஜெயக்குமார், திரு.D.மணிவாசகன், சிறப்பு பயிற்சியாளர் திரு.T.M.சௌந்தரராஜன் மற்றும் சத்தியமங்கலம் ஊராட்சி மன்றத் தலைவி திருமதி.அபர்ணா ரவி ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கு சூர்யா மினி ஹால் உரிமையாளர் திரு.J.சுரேஷ் அவர்கள் தலைமை தாங்கினார். புலவர்.செ.பாபு அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

சூர்யா மினி ஹால் உரிமையாளர் திரு.J.சுரேஷ் அவர்கள் தலைமை வகித்து பேசும் போது, “வாழ்வில் சரியான முடிவு எடுத்தவர்களே முன்னேறி இருக்கிறார்கள். நாட்டின் தலைவர்கள் சரியான முடிவு எடுக்கும்போது தான் நாடு நலம் பெறுகிறது. அதுவே சரித்திரத்தில் இடம் பெறுகிறது. ஒரு தொழிலின் அபிவிருத்திக்கு ஒரு கம்பெனி தலைவர் எடுக்கும் முடிவுகள் வழிகோலு கின்றன. அதேபோல மாணவர்களாகிய நீங்களும் உங்களின் எதிர்காலத்தை முடிவு செய்ய வேண்டிய காலக்கட்டத்தில் நிற்கிறீர்கள். இதற் கான சிறந்த வழிகாட்டியாக ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை நடத்தும் கே.ஆர்.டி கேரியர் அகாடமியின் நிர்வாகிகள் நேரில் நம் பகுதியில் விஜயம் செய்து ஏழை, எளிய மாணவர்களுக்கு போட்டித்தேர்வுகளுக்கு இலவசமாக பயிற்சி வழங்க முன்வந்திருப்பது பாராட்டுக்குரியது. இதனை கிராமப்புறப் பகுதியில் வாழும் நம் ஏழை மாணவ, மாணவிகள் பயன்படுத்திக் கொண்டு போட்டித்தேர்வுகளில் கலந்து கொண்டு அதிகாரமிக்கப் பதவிகளுக்கு செல்ல வேண்டும் என வாழ்த்துகிறேன்” என்றார்.

நிகழ்ச்சியில் கே.ஆர்.டி. கேரியர் அகாடமி நிர்வாக இயக்குநர் திரு.V.செல்வராஜு அவர்கள் பேசும்போது, “வசதிப்படைத்த ஒருசில தனிப்பட்ட இளைஞர்கள் பணம் செலுத்தி சிறந்த முறையிலே பயிற்சி எடுத்துக் கொண்டு மத்திய மாநில அரசின் அதிகாரமிக்க அரசு பணிகளில் அமருகிறார்கள். ஆனால் கிராமப்புற ஏழை மாணவ, மாணவிகள் இந்த வாய்ப்பும், வசதியும் கிடைப்பதில்லை. இதனால் முடிவெடுக்க தயக்கப்படுவதோடு முடியாதவர்களாகவும் இருக்கிறார்கள். இந்த நிலை மாறவேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் ஓ.பி.ஆர் நினைவுத்தொண்டு அறக்கட்டளையின் மூலம் நடத்தப்படும் கே.ஆர்.டி. கேரியர் அகாடமி இலவசப்பயிற்சி யினை வழங்கிவருகிறது. கிராமப்புற மாணவர் களிடையே தயக்கத்தையும், அச்சத்தையும் போக்கி தைரியத்தை ஊட்டி வருகிறோம். இந்த கே.ஆர்.டி. கேரியர் அகாடமி தொடங்கி இரண்டரை ஆண்டு களில் இதுவரை இலவசமாக பயிற்சி எடுத்துக் கொண்ட மாணவ மாணவிகளில் 33 பேர் அரசுப் பணியில் அமர்ந்திருக்கிறார்கள். கனவுகளை மட்டுமே சுமந்துக் கொண்டு எதிர்காலம் பற்றிய கவலையோடு வாழ்ந்து வரும் இளைய சமுதாயத்திற்கு எங்கள் அகாடமி சிறந்த வழிகாட்டியாக அமைந்துள்ளது. நீங்களும் எங்களிடம் சேர்ந்து இணைந்து பயிற்சி எடுத்துக் கொண்டு பயன்பெற இதன்மூலம் கேட்டுக் கொள்கிறேன்” என்றார்.

சிறப்பு பயிற்சியாளர் திரு.T.M.சௌந்தரராஜன் அவர்கள் பேசும்போது, “இளைஞர்களே உங்களுக்கு போதிய ஆற்றல், திறன் இருக்கிறது. ஆனால் அதை உணராமல் அதனை வளர்த்துக் கொள்ளாமலும் இருப்பதால் தான் உங்கள் வாழ்வில் விரக்தி உருவாகிறது. நானும் இளம் வயதில் அப்படிதான் காணப்பட்டேன். தன்னம்பிக்கையோடு செயல்பட்டு இன்று உங்களுக்கு பயிற்சி வழங்கும் நிலைக்கு உயர்ந்திருக்கிறேன்.உங்களுக்கு எந்தத் துறையில் இயற்கையாகவே ஆர்வம் இருக்கிறது. எந்தத் துறையில் நீங்கள் பிரகாசிக்க முடியும் என்பதை வரிசைப்படுத்தி அந்தத் துறை சம்பந்தப்பட்ட போட்டித் தேர்வுகளுக்கு பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். கடினமாக உழையுங்கள். நேரத்தை திட்டமிட்டு அறிவுப்பூர்வமாக பயன்படுத்துங்கள். இலட்சியத்தை நிச்சயம் அடைவோம் என்ற நம்பிக்கையோடு ஒவ்வொரு நாளும் வாழ்வைத் தொடங்குங்கள். வெற்றிப் பெறுவீர்கள். பன்மடங்கு உங்களுக்கும் சமூகத்திற்கும் பலன் தரும் வெற்றியை அடைவீர்கள். ஒருவருக்கு பல இடத்திலிருந்துவேலைக்கான அழைப்பு வருகிறது. ஆனால் மற்றவர்களுக்கோ எங்கு சென்றாலும்



வேலை இல்லை என்ற மறுப்புக் கடிதம் வருகிறது. என்ன காரணம்? முதல் நபர் கூர்மையான அறிவுத் திறனும், ஆற்றலும்மிக்கவராக இருப்பதுதான். ஆகவே உங்களுக்கு ஆர்வமான துறையை தேர்ந்தெடுத்து கொள்ளுங்கள். சிறந்த பயிற்சியினை இலவசமாக வழங்கி வருகிறது கே.ஆர்.டி கேரியர் அகாடமி. இதற்கான முழு செலவினையும் ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை ஏற்றுக்கொண்டுள்ளது. சென்னைப்போன்ற நகரத்தில் இதுபோன்ற சிறந்த இலவசப்பயிற்சியினை வேறு எந்த நிறுவனமும் வழங்கவில்லை. இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள கிராமப்புற ஏழை, எளிய மாணவர்கள் பெருமளவில் முன்வர வேண்டும். நல்ல நோக்கத்தின் அடிப்படையில் செயல்பட்டு வரும் கே.ஆர்.டி. கேரியர் அகாடமியின் நிர்வாகிகளை பாராட்டுவோம்" என்றார்.



இதனைத்தொடர்ந்து மாணவர்களுடன் கலந்தாய்வு நடைபெற்றது. மாணவர்களின் பல்வேறு கேள்விகளுக்கு பயிற்சியாளர் திரு.T.M.சௌந்தரராஜன் பதிலளித்தார்.

நிகழ்ச்சியில் ஓய்வுப் பெற்ற காவல்துறை ஆய்வாளர் திரு.N.ரவிவர்மன் மற்றும் மாணவ, மாணவிகள் பலரும் கலந்து கொண்டனர்.

சத்தியமங்கலம் பகுதியைச் சேர்ந்த தேசிய நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர் திரு.R.திலீப் அவர்கள் மாணவர்களுக்கான எதிர்கால தேவைகள் குறித்தும், அவர்களுக்கான வழிக்காட்டுதல் குறித்தும் கே.ஆர்.டி கேரியர் அகாடமியின் நிர்வாகிகளிடம் கேட்டறிந்து நன்றி தெரிவித்து பேசும் போது, "இன்றைய அவசர உலகில் வேலை இல்லா திண்டாட்டம் பெருமளவில் நிலவுகிறது. இச்சூழலில் TNPSC, TNUSRB, SSC, UPSC போன்ற மத்திய, மாநில அரசு நிறுவனங்கள் நடத்தும் போட்டித்தேர்வுகளில் கலந்துக் கொள்ளவும், இலவசப்பயிற்சி எடுத்து கொண்டு வெற்றிப்பெறவும் சிறந்த வழிகாட்டுதலை கே.ஆர்.டி. கேரியர் அகாடமியின் மூலம், ஓ.பி.ஆர் நினைவுத்தொண்டு அறக்கட்டளை நிர்வாகிகள் வழங்கி வருவதற்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த நிகழ்ச்சி இந்த பகுதி மாணவ மாணவிகளுக்கு பெரும்பயனுள்ளதாக அமைந்துள்ளது என்பதை மன நிறைவோடு தெரிவித்துக் கொள்கிறோம். கலந்துக் கொண்ட மாணவ, மாணவிகளுக்கும், இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்த திரு.J.சுரேஷ் ரெட்டி அவர்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்" என்றார்.

நிகழ்ச்சியில் கே.ஆர்.டி. கேரியர் அகாடமியில் இலவசப் பயிற்சி எடுத்துக் கொண்டு குரூப் 2 முதல் நிலைத்தேர்வில் தேர்ச்சி பெற்று தற்போது பயிற்றுனராக பணிபுரியும் திரு.B.ராம்குமார் அவர்கள் பேசும் போது, "நான் கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் பகுதியை சேர்ந்தவன். கடந்த 2022–ம் ஆண்டு நடைபெற்ற குரூப் 2 முதன்மைத் தேர்வில் கே.ஆர்.டி. கேரியர் அகாடமியில் இலவசமாக பயிற்சி எடுத்துக் கொண்டு வெற்றிப் பெற்றேன். தற்போது எனது ஓய்வு நேரத்தில் அகாடமியின் பயிற்றுனராக பணியாற்றுகிறேன். சென்னையில் மிகவும் வசதி படைத்தவர்கள் மட்டுமே சிறந்த பயிற்சியினை எடுத்துக் கொள்ள முடியும் என்கிற நிலையை மாற்றி அமைத்திருக்கிறது கே.ஆர்.டி. கேரியர் அகாடமி. இங்கு சிறந்த வல்லுனர்கள் மற்றும் ஆசிரியர்களை கொண்டு TNPSC அறிவித்துள்ள பாடத்திட்டத்தின்படி பாடங்கள் நடத்தப்பட்டு முறையாக சோதனைத் தேர்வுகள் நடத்தி சிறந்த பயிற்சியினை வழங்குகிறார்கள். கிராமப்புற ஏழை மாணவர்கள் தனது வறுமையை காரணம் காட்டி போட்டித் தேர்வுகளில் கலந்துக் கொள்வதை தவிர்த்து வருகிறார்கள். அதனை இந்த அறக்கட்டளை முழுமையாக முறியடித்துள்ளது. அனைத்து தரப்பு மாணவர்களும் இதில் பயிற்சி எடுத்துக்கொள்ள முடியும். TNPSC, TNUSRB, SSC, UPSC நிறுவனங்கள் நடத்தும் ஒவ்வொரு தேர்விலும் இந்த அகாடமியில் இருந்து மாணவர்கள் வெற்றிப் பெற்று பணி ஆணை பெறுகின்றனர். எனக்கு பிற பயிற்சி நிறுவனங்களில் பயின்றுவரும் நண்பர்கள் பலர் என்னோடு தொடர்பில் இருக்கிறார்கள். அவர்கள் சொல்லும் ஒரே வார்த்தை கே.ஆர்.டி. கேரியர் அகாடமியே சிறந்த பயிற்சி நிறுவனம் என ஒப்புதல் வாக்குமூலம் தருகின்றனர். அப்படி ஒரு தலைசிறந்த நிறுவனமாக உருவெடுத்து வரும் இந்த அகாடமியில் நீங்களும் இலவசப் பயிற்சி எடுத்துக் கொண்டு பலனடைய வேண்டும் என வாழ்த்தி வரவேற்கிறேன். வாய்ப்புகள் நாளும் நம்மை நோக்கி வருகின்றன. வரும் வாய்ப்புகளை கொண்டு வாழ்வில் வெற்றிபெற்று எல்லா நலன்களையும் பெற்று நாம் வாழப் போகிறோம் என்பதில் நமக்கு அசைக்க முடியாத நம்பிக்கை வேண்டும். அதை அடைய நமக்கு நல்ல வழிகாட்டுதலையும், தன்னம்பிக்கையையும் வழங்குகிறது கே.ஆர்.டி. கேரியர் அகாடமி" என்றார்.

# செஞ்சி-ரெட்டிபாளையம் கிராமத்தில் நீர்மோர் பந்தல் திறப்பு நிகழ்ச்சி




கடந்த 05.05.2024 ஞாயிறு அன்று விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம் ரெட்டிபாளையம் கிராமத்தில் நீர்மோர் பந்தல் திறக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஓபிஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் திரு.V.செல்வராஜு, அறங்காவலர்கள் திரு.V.ஜெயக்குமார், திரு.D.மணிவாசகன், திரு.T.M.சௌந்தரராஜன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். நீர்மோர் பந்தலை திரு.V.செல்வராஜு அவர்கள் திறந்துவைத்து பொதுமக்களுக்கு வழங்கினார்.

வெயிலின் தாக்கத்திலிருந்து பொதுமக்களை காக்கும் வகையில் பல்வேறு சமூகப் பணிகளை செய்து வரும் காமராஜ் மக்கள் கட்சி மாவட்ட நிர்வாகியும், சூர்யா மினி ஹால் உரிமையாளருமான திரு.J.சுரேஷ் அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் ரெட்டிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த ஓய்வுப் பெற்ற தமிழாசிரியர் திரு.செ.பாபு ரெட்டி, ஓய்வுப் பெற்ற காவல் உதவி ஆய்வாளர் திரு.N. ரவிவர்மன், தேசிய நல்லாசிரியர் விருது பெற்ற திரு.J.திலீப் மற்றும் ரெட்டிபாளையம் கிராம ரெட்டி நலச் சங்க முக்கிய நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பித்தனர்.

# மீஞ்சூரில் கோயில் திருவிழா குழு நிர்வாகிகள் கூட்டம்

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம் வட சென்னை புறநகரில் அமைந்துள்ளது மீஞ்சூர். இது வட காஞ்சிபுரம் என்று பொருள்படும் வட காஞ்சி என அழைக்கப்படுகிறது. இதைச் சுற்றி 20க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இந்த ஊரில் காஞ்சிபுரத்தை போலவே சிவன் மற்றும் விஷ்ணுவிற்கும் இரண்டு புகழ்பெற்ற பிரபலமான கோயில்கள் உள்ளன. ஸ்ரீகாமாட்சி அம்மன் உடன்உறை ஸ்ரீ ஏகாம்பரநாதர் கோயில் மீஞ்சூர் நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளது. ஸ்ரீஏகாம்பரநாதர்கோயில், சிவன் கோயில் இரண்டு கோயில்களின் திருவிழாக் குழுவின் நிர்வாகிகள் தேர்வுக்கான பேரவை கூட்டம் கடந்த 16.06.2024 அன்று நடைபெற்றது. இதில் கீழ்கண்ட நிர்வாகிகள் ஏகமனதாக தேர்வு செய்யப் பட்டதாக தீர்மானிக்கப்பட்டது.

**ஆலோசனைக்குழு தலைவர்கள்**

1. திரு. தசரத ரெட்டியார்
2. திரு. ஞானகிராம ரெட்டியார்
3. திருமதி. D.V.S ஸ்ரீமதி அம்மாள்
4. திரு. V.சிவராமா ரெட்டியார்

**கௌரவத் தலைவர்கள்**

1. திரு. L.நரசிம்மலு ரெட்டியார்
2. திரு. A.B.ராஜேந்திர ரெட்டியார்
3. திரு. D.உதயகுமார் ரெட்டியார்

**நிர்வாகக் குழு உறுப்பினர்கள்**

1. திரு. D. ரவிச்சந்திர ரெட்டியார், ராமரெட்டிபாளையம்
2. திரு. D.ரவிக்குமார் ரெட்டியார், கொரஞ்சூர் ரெட்டி பாளையம்
3. திரு. A.B.ராஜேந்திர ரெட்டியார், ஸ்ரீமுரளிநகர்
4. திரு.N.K.வினோத் ரெட்டியார், சுப்பாரெட்டிபாளையம்
5. திரு.N.S.ஹரிபாபு ரெட்டியார், வேளூர்குமரன் தோப்பு
6. திரு.K.S.ஜெயச்சந்திரன் ரெட்டியார், BDO ஆபீஸ், வெங்கட்ரெட்டியார்பாளையம்

**தலைவர்**

1. திரு. K.கௌசிக் ரெட்டியார், ராமாரெட்டிபாளையம்

**துணைத் தலைவர்கள்**

1. திரு. D. பாபு ரெட்டியார், வெங்கட்ரெட்டிபாளையம்
2. திரு. D.ரவி ரெட்டியார், ராமாரெட்டிபாளையம்

# வயலூர் ரோடு ரெட்டி நல சங்க சிறப்புக் கூட்டம்





வயலூர் ரெட்டி நலச் சங்கம் சார்பில் கடந்த 02.06.2024 அன்று மாதாந்திர சங்கக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் திரு.வீ.செல்வராஜு அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டார்.

சங்கத் தலைவர் திரு.P.ஜனார்த்தனம் அவர்கள் தலைமை தாங்கினார், செயலாளர் திரு.C.ராஜேந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

நிகழ்ச்சியில் துணைத்தலைவர் Dr.R.ராஜகோபாலன், இணைச்செயலாளர் திரு.S.ஜெயக்குமார், திரு.R.மனோகரன், திரு.S.மனோகரன், திரு.முரளி, திரு.S.செந்தில்குமார், திரு.S.மாணிக்கவாசகம், திரு.R.பிரசன்னாவெங்கடாச்சலம், திரு.K.ரமேஷ் உள்ளிட்ட நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

ஓ.பி.ஆர் நினைவுத்தொண்டு அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் திரு.வீ.செல்வராஜு அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டு பேசும் போது, "இந்தியாவில் இருக்கின்ற பல சமூக பிரச்சனைகளில் தலையாய பிரச்சனை சாதி பிரச்சனையே ஆகும். அதன் விளைவுகள் தான் இன்றைய சாதி மோதல்கள், அமைதியின்மை, அரசியல் மாற்றம் போன்றவை நிகழ்ந்து வருகின்றன.

வேதக்காலத்தில் சொல்லப்பட்ட பிராமணன், வைஸிகன், சத்திரியன், சூத்திரன் இவைகள் சாதி பெயர்கள் அல்ல என்றும், இதை தற்போது வர்ணாசிரமம் என்றும் அழைக்கிறார்கள். அந்தப் பெயர்களில் பலப் பிரிவுகள் உருவாகி இன்று சாதிகளாக மாறி விட்டது. Casteism என்பது வேறு Caste-System என்பதும் வேறு. சாதி என்பது வேறு சாதிவெறி என்பது வேறு.

OBC பட்டியலில் ரெட்டி கஞ்சம் இடம்பெறுமா? என்கிற கேள்விகளுக்கெல்லாம் விடையளிக்கும் வகையில் ஆய்வு செய்யவேண்டும் என்ற எண்ணமும், சமுதாயப்பற்றும் என்னை சிறுவயதில் இருந்தே சமுதாயத் தொண்டில் ஈடுபட வைத்தது. அதன் விளைவாக 12 ஆண்டுகள் ஆய்வு செய்து சமர்ப்பிக்கப்பட்டதே எனது ஆய்வறிக்கை.

நம் ரெட்டி இன மக்கள் எங்கிருந்து வந்தார்கள்? இதில் எத்தனை பிரிவுகள் உள்ளன? அவர்களை எவ்வாறு அடையாளம் காண்பது, அவர்களது கலாச்சாரம், பண்பாடு, குலதெய்வ வழிபாடு, தொழில் மற்றும் அவர்களது இன்றைய நிலை என்ன என்பது குறித்து ஆய்வு தேவை என்பதை உணர்ந்து அரசாங்க பதிவுகள், ஆணைகள், எழுத்துவடிவ ஆதாரங்கள், கடிதங்கள், ஆவணங்கள், ஆய்வு சார்ந்த புத்தகங்கள், பிற ஆய்வுக்கட்டுரைகளின் சாராம்சங்கள், நாளேடுகளில் வெளியான செய்திகள், நம் சமூகத்தின் மூத்த குடி மக்களின் நேர்காணல்கள், சமூக தொடர்புடைய தகவல்கள் கல்வியிலும், வேலையிலும் பெற்றுள்ள பங்கு குறித்து புள்ளி விவரங்களுடன் ஆய்வு செய்து சமர்ப்பித்திருக்கிறேன்.

இதுகுறித்து நாளை 03.06.2024 அன்று பொது மக்களின் வாய்மொழித் தேர்வினை திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் நடத்தி **டாக்டர் பட்டம்** வழங்க இருக்கிறது. இந்த நிகழ்ச்சியில் நீங்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்" என்றார்.

**தீர்மானம் 1 :** K.K.நகர் ரெட்டி நலச் சங்க பொருளாளர் திரு.A.R.வெங்கடாசலம் அவர்களின் மறைவிற்கு சங்கம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து அன்னாரின் ஆன்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இரண்டு நிமிடம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

**தீர்மானம் 2 :** கோடை காலத்தை முன்னிட்டு சங்கத்தின் சார்பில் பொதுமக்களுக்கு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நீர் மோர் வழங்கப்பட்டது. அப்பணி சிறப்பாக நடைபெறுவதற்கு முழு ஒத்துழைப்பு நல்கிய சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கும், அலுவலகப்பணியாளர்களுக்கும், நன்கொடை வழங்கியவர்களுக்கும் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 3 :** சங்க உறுப்பினர் திரு.C.V.விஜயன் அவர்களின் மகன் திரு.V.கணேஷ் அவர்கள் 10 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 500க்கு 496 மதிப்பெண்கள் பெற்று திருச்சி மாவட்டத்தில் முதல் இடமும் தமிழக அளவில் அரசுப் பள்ளிகளின் சார்பில் இரண்டாம் இடமும் அனைத்துப் பள்ளிகளின் சார்பில் நான்காம் இடமும் பெற்று குடும்பத்திற்கு மட்டுமல்லாமல் நமது இனத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். அவருக்கு சங்கத்தின் சார்பில் ஒரு சிறப்புக் கூட்டம் நடத்தி பாராட்டுவதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.


**தீர்மானம் 4 :** ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் திரு.வீ.செல்வராஜு அவர்கள் டாக்டர் பட்டம் பெறுவதையொட்டி அவர்களுக்கு சங்கத்தின் சார்பில் பாராட்டுகளும் வாழ்த்துகளும் தெரிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

**தீர்மானம் 5 :** மே 2024 மாத வரவு செலவு கணக்கு சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

நிறைவாக வயலூர் ரெட்டி நலச்சங்கப் பொருளாளர் திரு.P.புனிதன் நன்றி தெரிவித்தார்.

# திரு.K.N.அருண்நேரு எம்.பி பெரம்பலூர் பாராளுமன்ற தொகுதியில் வெற்றி





தமிழ்நாடு நகராட்சி நிர்வாக துறை அமைச்சரும், திமுக முதன்மை செயலாளரு–மான **மாண்புமிகு கே.என்.நேரு**–திருமதி.சாந்தா அவர்களின் மகனாக திருச்சி மாவட்டம், லால்குடி தாலுகா, காணக்கிளியனூர் கிராமத்தில் **திரு.K.N.அருண் நேரு** அவர்கள் டிசம்பர் 13, 1984ல் பிறந்தவர். இவர் திமுக சார்பில் பெரம்பலூர் நாடாளுமன்ற வேட்பாளராக அறிவிக்கப்பட்டு மகத்தான வெற்றிப் பெற்றுள்ளார். வாழ்த்துகள்.

மாண்புமிகு கே.என்.நேரு அவர்களின் தம்பதியருக்கு ஒரு மகன், இரண்டு மகள் உள்ளனர். திரு.K.N.அருண்நேரு எம்.பி தனது ஆரம்பக் கல்வியை RSK பள்ளியிலும், 9-ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு பள்ளிப்படிப்பை திருச்சி கேம்பியன் பள்ளியிலும் படித்தார். திரு.K.N.அருண்நேரு அவர்கள் தனது கல்லூரிப் படிப்பை அமெரிக்காவின் பிரபலமான Harvard University இல் கட்டுமான நிர்வாகத்தில் முதுகலைப்பட்டம் (M.S-Construction Management) OPM படித்தார். இவர் டாக்டர்.A.தீபிகாவை திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். விவசாயம் மற்றும் அரிசி ஆலை நிர்வாகத்தை கவனித்து வரும் இவர் தந்தைக்கு ஏற்ற தனயனாக உடன் இருந்து அரசியல் பணிகளை உற்று கவனித்து வந்தார்.

இவரை எளிதில் அணுக முடியும், ஏழை, எளிய மக்களும் தம் குறைகளை சொல்லி தீர்வு காணமுடியும் என்கிற எண்ணத்தை சாதாரண தொண்டர்களிடையேயும் விதைத்தவர். இதனால் திராவிட முன்னேற்ற கழக தொண்டர்கள் **"வருங்காலமே..."** என்ற அடைமொழியுடன் திரு.K.N.அருண் நேரு அவர்களின் பிறந்தநாள் மற்றும் பண்டிகை காலங்களில் போஸ்டர் அடித்தும், நேரில் வாழ்த்து சொல்லியும் கொண்டாடி, அவர் மனதில் அரசியல் விதையை விதைத்ததன் விளைவாக அரசியலுக்கு வந்தவர்.

இவர் கடந்த சில ஆண்டுகளாக தனது தீவிர அரசியல் பயணத்தைத் தொடங்கி மக்களை சந்தித்து குறைகளைக் கேட்பது, நலத்திட்ட உதவிகள் வழங்குவது, இளைஞர்களின் விளையாட்டுப் போட்டிகளை துவக்கி வைப்பது போன்ற பல்வேறு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மக்களுக்கு பிரபலமான முகமாக திகழ்கிறார்.

திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவர் மாண்புமிகு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புதுமுகங்களை அரசியலுக்கு அறிமுகம் செய்யும் நோக்கோடும், இளைய தலைமுறைக்கு வாய்ப்பளிக்கும் நோக்கத்தோடும் அருண் நேருவுக்கு பெரம்பலூர் நாடாளுமன்ற வேட்பாளராக வாய்ப்பினை வழங்கினார்.

பெரம்பலூர் மக்களவைத் தொகுதியில் 6,03,209 வாக்குகள் பெற்று அபார வெற்றி பெற்றார். திமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் தமிழகம் மற்றும் புதுவை அனைத்து தொகுதிகளிலும் (40/40) வெற்றிப்பெற்றன. திரு.கே.என்.அருண் நேரு அவர்கள் 3,85,500 வாக்குகள் வித்தியாசத்தில் அவரை எதிர்த்து போட்டியிட்ட அதி–முகவின் திரு.என்.டி.சந்திரமோகனை தோற்கடித்தார்.

திரு.K.N.அருண் நேரு அவர்கள் பெரம்பலூர் நாடாளுமன்ற தேர்தல் வெற்றி குறித்தும், எதிர்கால திட்டங்கள் குறித்தும் ரெட்டி மலர் இதழுக்கு அளித்த நேர் காணலில்,

"தமிழக முதல்வரும், திமுக தலைவரு மான மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களின் மக்கள் நலத்திட்டங்களால் தான் இந்த வெற்றி கிடைத்திருக்கிறது என தெரிவிக்கும் இவர்,





ஓ.பி.ஆர்.நினைவு தொண்டு அறக்கட்டளை மற்றும் ரெட்டி இளைஞர் பேரவையின் சார்பில் பெரம்பலூர் பாராளுமன்ற உறுப்பினர் தேர்தலில் வெற்றி பெற்ற **திரு.கே.என்.அருண் நேரு** அவர்களையும் வெற்றிக்கு காரணமான நகராட்சி நிர்வாகம், நகர்புற மற்றும் நீர் வழங்கல் துறை அமைச்சர் **மாண்புமிகு கே.என்.நேரு** அவர்களையும் நேரில் சந்தித்து பாராட்டும் வாழ்த்தும் தெரிவித்தோம்.

* தொகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும், வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், காவேரி ஆற்றுநீர் வீணாவதைத் தடுக்கும் வகையில் உபரிநீரை ஏரிகுளங்களுக்கு எடுத்து செல்ல நடவடிக்கை எடுக்க திட்டமிட்டிருக்கிறேன்.
* எளிமையான விஷயங்களில் கவனம் செலுத்தவும், சாதாரண மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் நான் விரும்புகிறேன்.
* பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதியில் இடம் பெற்றுள்ள பெரம்பலூர், முசிறி, துறையூர், லால்குடி, மண்ணச்சநல்லூர், குளித்தலை ஆகிய சட்டமன்ற தொகுதிகள் அடங்கியுள்ளது. இதன் மக்கள்தொகை குறைவாக இருப்பதால் இரயில் சேவை கொண்டு வர இயலாமல் உள்ளது. பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதிக்கு இரயில் போக்குவரத்து அமைய ஒன்றிய அரசுக்கு கோரிக்கை வைத்து அதில் வெற்றி பெற முயற்சிகளை மேற்கொள்வேன். இவ்விஷயத்தில் ஒன்றிய அரசை வலியுறுத்துவேன்.
* சுகாதாரம் மற்றும் வேலைவாய்ப்பை கொண்டு வருவதில் சிறப்பு கவனம் செலுத்தி ஏழை மக்களின் சுகாதார வசதிகளை பெருக்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வேன்" என்றார்.

**வெற்றி எப்படி சாத்தியமானது என்று திரு.K.N.அருண்நேரு அவர்களிடம் கேட்ட போது,**

"தொகுதிக்கு நான் புதியவன் என்றாலும் திமுக என்ற மாபெரும் இயக்கத்தின் தலைவரும், **மாண்புமிகு முதல்வர் மு.க.ஸ்டாலின்** அவர்களின் ஆசியும் எனக்கு இருந்தது. திராவிட மாடல் ஆட்சியில் முதல்வரால் கொண்டுவரப்பட்ட பெண்கள் உரிமைத்தொகை திட்டம் பெண்கள் மத்தியில் மிகப்பெரிய வரவேற்பை பெற்றிருந்தது. மேலும் நீண்ட அரசியல் அனுபவம் கொண்ட எனது தந்தை **மாண்புமிகு திரு.கே.என்.நேரு** அவர்களின் மக்கள் பணி தமிழகம் முழுவதும் குறிப்பாக பெரம்பலூர் நாடாளுமன்ற எல்லைக்குட்பட்ட பகுதி முழுவதும் சிறப்பாக இருந்தது எனது பலம். மேலும் நானும், கழக நிர்வாகிகளும், தொண்டர்களும், நண்பர்களும் கடுமையாக உழைத்ததால் இந்த வெற்றி சாத்தியமானது என தன்னடக்கத்தோடு தெரிவித்தார்.


இந்த வாய்ப்பை ஒரு பெரிய பொறுப்பாக நான் பார்க்கிறேன். வாரிசு அரசியல் என்று என்னை முத்திரை குத்தியவர்களுக்கு அப்படி அல்ல என்பதை எனது கடின உழைப்பின் மூலம் நிரூபிப்பேன். அரசியல் பயணத்தில் நான் நீண்ட தூரம் செல்ல வேண்டியிருப்பதால், நான் திறந்த மனதுடன் மேலும் கற்றுக்கொள்ள தயாராக இருக்கிறேன்" என்றார்.

தந்தையின் அரசியல் அனுபவத்தை அருகில் இருந்து பார்த்து கற்றுக்கொண்ட திரு.K.N.அருண் நேரு அவர்கள் பலவகையிலும் நம் சமூகத்தின் மீது பற்றுடையவராக திகழ்கிறார். கடந்த சில ஆண்டுகளாக தந்தையோடு பயணிக்கும் இவர் ஏழை, எளிய மக்களின் குறைகளை நாள்தோறும் கேட்டறிந்தும், அதற்கு உடனுக்குடன் நடவடிக்கையும் எடுத்தும் வருகிறார்.

ரெட்டியார் சமுதாயம் பாதுகாப்பாக இருக்கவும், நமக்கான உரிமைகளையும், சலுகைகளையும் பெற்றுத் தருவதற்காக புதிதாக பாராளுமன்றம் செல்லும் திரு.K.N.அருண் நேரு அவர்களுக்கு நெஞ்சார்ந்த வாழ்த்துகள். அவர் மூலம் நம் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்போம், நம் நம்பிக்கை நட்சத்திரமான திரு.K.N.அருண் நேரு அவர்களின் வெற்றி நம் அனைவருக்கும் மகிழ்ச்சியை தருகிறது.

இவரது பணி மேலும் சிறக்க பெரம்பலூர் பாராளுமன்ற உறுப்பினராக வெற்றி பெற்ற திரு.K.N.அருண் நேரு அவர்களுக்கு ரெட்டி இளைஞர் பேரவை, ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை, கே.ஆர்.டி.கேரியர் அகாடமி மற்றும் ரெட்டி மலர் சார்பில் இதயப்பூர்வமான வாழ்த்துகள்.

# திரு.V.வைத்திலிங்கம் எம்.பி. புதுச்சேரி பாராளுமன்ற தொகுதியில் வெற்றி



சிலர் பதவிகளைத் தேடி ஓடுவார்கள். ஆனால் சிலரைத் தேடி வரும் பதவிகள் வேண்டாம், வேண்டாம் என்று ஓடி ஒளிந்தாலும் கூட துரத்திக் கொண்டே வந்து அணைத்துக் கொள்ளும். அது சில பாக்கியவான்களுக்கு மட்டுமே கிடைக்கும் பேறு. **திரு.V.வைத்திலிங்கம்** அவர்கள் அந்த பேறுபெற்றவர்.

அமைச்சருக்கு இலக்கணம் கூறிய வள்ளுவர் 'தெரிதலும்' 'தேர்ந்த செயலும்' என்று கூறுகிறார். ஒரு விஷயத்தைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும். தெரிந்து தேர்ச்சிப் பெற்றதும் துணிவாக செயல்பட வேண்டும் என்பது அவருடைய கருத்து. சுக்கு கஷாயம் வைக்கவும் தெரியவேண்டும். எப்போது சாப்பிட வேண்டும் என்று அறியவும் வேண்டும் என்று மகா கவி குஞ்சன் நம்பியார் கூறுவார். திரு.வைத்திலிங்கத்திடம் இந்த அரியப்பண்புகள் நிறைந்திருக்கின்றன. அவசரப்படமாட்டார். படபடப்பும், பரபரப்பும் அவரிடம் பார்க்கவே முடியாது. எப்பொழுதும் ஒரு நிதானமாக சிரித்துக் கொண்டே இருப்பார். அவர் எப்போதுமே தன்னை முன்னிறுத்திக் கொள்ளாமல் செயல்களுக்கே சிறப்பிடம் தருவார். இவர் புதுவையின் புறவாழ்விலும், அக வாழ்விலும் ஒரு புதிய அத்தியாயம் எழுதினார். காட்சிக்கு எளியவர், கடுஞ்சொல் அற்றவர். அதுவே ஆட்சிக்கு அணிகலன்களாக இருந்தன.

புதுச்சேரி பிரதேச காங்கிரஸ் கமிட்டியின் தலைவரும், புதுச்சேரியின் முன்னாள் முதல்வரும், கலைக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவருமான மாண்புமிகு **V.வைத்திலிங்கம்** எம்.பி அவர்கள் மீண்டும் தற்போது புதுச்சேரி காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு I-N-D-I-A கூட்டணியின் நாடாளுமன்ற வேட்பாளராக வெற்றிப் பெற்றுள்ளார்.

**மாண்புமிகு V.வைத்திலிங்கம் எம்.பி** அவர்கள் அக்டோபர் 5, 1950 அன்று கடலூரில் பிறந்தவர். மடுகரையில் வளர்ந்தார். தனது பள்ளிப்படிப்பை புதுவையில் முடித்து தொடர்ந்து சென்னை லயோலா கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்தப்பின் சிறிதுகாலம் விவசாயத் தொழிலில் ஈடுபட்டார். இவர் ஒரு சுதந்திர போராட்ட தியாகியின் குடும்பத்தில் இருந்து வந்தவர். 1969ல் சசிகலா என்ற மங்கையை மணம் புரிந்தார். இவருடைய தாத்தா வைத்திலிங்கம் நெட்டப்பாக்கம் மேயராக பணியாற்றியவர். தந்தை V.வெங்கடசுப்பா ரெட்டியார் இரு முறை புதுச்சேரி மாநிலத்தின் முதலமைச்சராக பணியாற்றியவர்.

விவசாயத்தொழில் செய்தபொழுது வேளாண்கழகத்தின் தலைவர் பதவியை வகித்தவர். பின்னர் பொதுவாழ்வில் தன்னை இணைத்துக்கொண்டார். தொழிலாளர்கள், ஏழை மக்களின் பாசத்தொடர்பை வளர்த்துக்கொண்டு தனது பணியை தொடங்கியவர். கடின உழைப்பும், எப்போதும் தளராத உற்சாகமும் இவரது பலம். இவரிடம் சற்று பேசினாலே நமக்கும் உற்சாகம் தொற்றிக் கொள்ளும்.

இவரது எளிமை, எதற்கும் கலங்காமை, பிறர் திறமையை மதித்தல், கஷ்ட, நஷ்டங்கள் அறிந்து உதவுதல், ஆன்மீக ஈடுபாடு, மக்கள் தொண்டு இவையனைத்தும் இவரது சிறப்பம்சங்கள். காங்கிரஸ் பேரியக்கத்திற்காக கடுமையாக உழைத்திருந்தாலும் கூட கட்சி மூலம் சில சமயங்களில் உரிய அங்கீகாரம் கிடைக்காத சூழ்நிலையிலும் கட்டுப்பாட்டை மீறாத விசுவாசி. குடும்பத்தை பாதுகாத்து—தனிமனித ஒழுக்கம் பேணி, சிறப்பாக தொழிலை கவனித்து வருபவர்களால் தான் பொது வாழ்வில் தூய்மையாக செயல்படமுடியும், தொடர முடியும் என்பதற்கு V.வைத்திலிங்கம் அவர்கள் ஒரு முன்னுதாரணம்.

**முன்னோர்களை மதிப்பது :** கூட்டுக்குடும்பம் – இந்திய பண்பாட்டை காக்க வேண்டும்; குடும்பத்தினரின் உணர்வுகளை அறிந்து, கலந்து பேச வேண்டும்; உறவுகளுடன் மனம் திறந்து கலந்துரையாட வேண்டும்; தீவிரவாதம் இல்லாத உலகம் உருவாக வேண்டும் என்பதெல்லாம் இவர் வலியுறுத்தும் விஷயங்கள். சாதி மதங்களைக் கடந்து – மறந்து ஏற்றத்தாழ்வில்லா சமுதாயம் உருவாக வேண்டும் என்பது இவரது விருப்பம். காங்கிரசை சேர்ந்தவர் என்றாலும் பிற கட்சியினரையும் மதிப்பவர். எல்லோருக்கும் நல்லவர்!

எட்டுமுறை புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றிய இவர், 1985 முதல் 1991



வரை புதுச்சேரி மாநில பொதுப்பணித்துறை அமைச்சராக பணியாற்றினார். அடுத்ததாக 11வது முதலமைச்சராக 1991 முதல் 96 வரை தனது 40ஆம் வயதில் பணியாற்றினார். 2008 முதல் 2011 வரை புதுச்சேரியின் 16—வது முதலமைச்சராகவும் பதவி வகித்தார்.

2016 முதல் 2019 வரை புதுவை காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றத்தலைவர் பதவியை வகித்தவர். தற்பொழுது புதுவை மக்களவைத்தொகுதியின் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக பணியாற்றி வருகிறார். இவர் நடத்தும் அல்லது பங்கு கொள்ளும் நிகழ்ச்சிகளை குறித்த நேரத்தில் ஆரம்பித்து முடிப்பதில் கவனம் செலுத்துபவர். காட்சிக்கு எளியவரான இவர் இனிமையாக பழகக்கூடிய மென்மையான பண்பு கொண்டவர்.

மேலும் புதுச்சேரியில் காங்கிரஸ் கட்சியுடன் 50 ஆண்டுகளாக இடைவிடாத தொடர்பை வளர்த்துக்கொண்டிருப்பவர். இவர் 2021ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி மிக மோசமான தேர்தல் தோல்வியை சந்தித்தது. இந்நிலையில் 2024 நாடாளுமன்ற தேர்தலுக்கு ஒரு வருடம் முன்பு நீண்ட காலம் அனுபவம் பெற்ற திரு.V.வைத்திலிங்கம் அவர்களை தலைவராக நியமிப்பதன் மூலம் மாநிலப் பிரச்சனைகளை தீர்க்க முடியும் என அகில இந்திய காங்கிரஸ் முடிவு செய்தது. இவரை மீண்டும் புச்சேரி பாராளுமன்ற வேட்பாளராக அறிவித்தது. அது அப்பகுதி மக்கள் மத்தியில் பாராட்டையும், வரவேற்பையும் பெற்றது.

மிகச்சிறந்த ஆளுமையும், நிர்வாகத்திறனும் கொண்ட ரெட்டியார் சமூகத்தைச் சேர்ந்த இவர் முன்னாள் முதலமைச்சரும், பிரெஞ்ச் ஆட்சியில் இருந்து புதுச்சேரியை விடுவித்த சிற்பிகளில் ஒருவருமான திரு.V.வெங்கடசுப்பாரெட்டியார் அவர்களின் வாரிசான திரு.V.வைத்திலிங்கம் அவர்கள் மாநிலத்தில் கட்சியை கட்டியெழுப்புவது மட்டுமல்லாமல், சாதிய சமநிலையை பேணுவது உள்ளிட்ட கடினமான சவால்களை எதிர்க்கொண்டு வெற்றிக் கண்டவர்.

பாராளுமன்ற தேர்தலில் பா.ஜ.க.வின் செல்வாக்கை மிஞ்சும் வகையில் சமூகத்தில் சமன்பாடுகளை பேணுவது திரு.V.வைத்திலிங்கம் அவர்களுக்கு சவாலாக இருந்தது. பாஜக அமைச்சர்கள் அடிக்கடி புதுச்சேரியில் சுற்றுப்பயணம் செய்து மக்களவை தேர்தல் பணிகளை செய்தது இவருக்கு பெரும் சவாலாக அமைந்திருந்தது. எனினும் அதிலும் சாதுர்யமாக பணியாற்றி வெற்றிக்கண்டார்.

மூத்த காங்கிரஸ் தலைவரான இவர் அகில இந்திய காங்கிரஸ் கட்சிக்கு மிகவும் விசுவாசமாகவும், இணக்கமாகவும் இருந்தவர். பரந்த அனுபவம் கொண்ட இவர் அனைத்து சமூக மக்கள் மத்தியிலும் ஒன்றிணைந்து செயல்பட்டு வெற்றிக்கண்டதில் ஐயமில்லை.

காங்கிரஸ் கட்சியின் வேட்பாளரான திரு.V.வைத்திலிங்கம் அவர்கள் புதுச்சேரியில் அபார வெற்றி பெற்றார். இவர் பாஜக வேட்பாளர் திரு.A.நமச்சிவாயத்தை 1.30 லட்சத்துக்கும் அதிக மான வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். திரு.V.வைத்திலிங்கம் அவர்கள் பணி மேன்மேலும் சிறக்க ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை, ரெட்டி இளைஞர் பேரவை, கே.ஆர்.டி. கேரியர் அகாடமி மற்றும் ரெட்டி மலர் மனதார வாழ்த்துகிறது.

# விழுப்புரம் வடக்கு மாவட்டம் முப்பெரும் விழா





கடந்த 25.05.2024 சனிக்கிழமை விழுப்புரம் வடக்கு மாவட்டம் தமிழ்நாடு ரெட்டி நல சங்கம் சார்பில் ஸ்ரீ சீதாராம திருக்கல்யாணம், விஜயரத சாந்தி தம்பதியரை கௌரவித்தல், ரெட்டி சமுதாய மாணவ, மாணவியரை பாராட்டுதல் என முப்பெரும் விழா திண்டிவனம் ஸ்ரீசுலோச்சனா பங்காரு திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டம் தலைவர் திரு.B.இரவிச்சந்திரன் ரெட்டி அவர்கள் தலைமை தாங்கினார். மாவட்ட கௌரவத் தலைவர் திரு.N.இரமணன் ரெட்டி அவர்கள் துவக்க உரை நிகழ்த்தினார். மாவட்ட செயலாளர் திரு.B.S.ஜெயபிரகாஷ் ரெட்டி, மாவட்ட துணை தலைவர் திரு.M.தர்மசிவம் ரெட்டி ஆகியோர் வரவேற்புரை நிகழ்த்தினர்.

விழாவில் திரு.J.குமார் ரெட்டி, திரு.C.ராமமூர்த்தி ரெட்டி, திரு.கிருஷ்ணதாஸ் ரெட்டி, திரு.S.ராதாகிருஷ்ணன் ரெட்டி, திரு.G.ராஜேந்திரன் ரெட்டி, திரு.பாபு ரெட்டி, திரு.M.தாமோதரன் ரெட்டி, திருJ.R.தண்டபாணி ரெட்டி, திரு.தேவிகுளம் சீத்தாராமன் ரெட்டி, திரு.K.நாராயணசாமி ரெட்டி, திரு.P.தியாகராஜன் ரெட்டி, திரு.அணையேரி ரவி ரெட்டி, திரு.வட பாலை சீனுவாசன் ரெட்டி, திரு.V.குருஷேன் ரெட்டி, திரு.V.புண்ணியமூர்த்தி ரெட்டி, திரு.G.R.தாஸ் ரெட்டி, திரு.செஞ்சி தினகரன் ரெட்டி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு ரெட்டி நல சங்கம் மாநில துணைத் தலைவர் திரு.P.இரவி ரெட்டி, மாநில துணைச் செயலாளர் திரு.D.அசோகன் ரெட்டி, ஓமந்தூர் ஸ்ரீராம் பள்ளி தாளாளர் திரு.S.முரளி ரெட்டி, அனுஜ் டைல்ஸ் குழுமம் உரிமையாளர் திரு.R.குமார் ரெட்டி, போகநாட் ரெட்டி நலச்சங்க தலைவர் திரு.LIC. V.ரவிச்சந்திரன், மாநில ரெட்டி இளைஞரணி செயலாளர் திரு.S.உதயகுமார் ரெட்டி, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் திரு.சிறுவை T.ராமமூர்த்தி ரெட்டி, சாரம் ஊராட்சி மன்றத்தலைவர் திருS.M.ராஜ்குமார் ரெட்டி, தொழிலதிபர் திரு.V.சம்பத் ரெட்டி, தென்னிந்திய ரெட்டி நல ஜன சங்கத் தலைவர் திரு.K.V.முத்துமல்லா ரெட்டி, சங்கமித்ரா கன்வென்ஷன் சென்டர் உரிமையாளர் திரு.D.V.ராமச்சந்திரன் ரெட்டி, தென்னிந்திய ரெட்டி நல ஜன சங்க செயலாளர் திரு.M.ரவிச்சந்திரன் ரெட்டி, திருவிதாங்கூர் மகாராஜாவின் ராயல் பேமிலி அறங்காவலர் திரு.R.ஸ்ரீதர் ரெட்டி, சென்னை வாழ் மதுரை விருதுநகர் சங்கத் தலைவர் திரு.G.பாலகுரு ரெட்டி, கம்பூர் திரு.V.குமாரகிருஷ்ணன் ரெட்டி, வேதா பால் உரிமையாளர் திரு.N.ரமேஷ் ரெட்டி, திரு.S.முத்துமல்லா ரெட்டி, மாநில ரெட்டி இளைஞரணி பொருளாளர் திரு.அருண் பாஸ்கர் ரெட்டி, திரு.மேல்பாக்கம் M.ராமநாதன் ரெட்டி, போகநாட் ரெட்டி நல சங்க மூத்த ஆலோசகர் திரு.R.பட்டாபி ரெட்டி, புளூமெட்டல் உரிமையாளர் திரு.நெமிலி V.ராமச்சந்திரன் ரெட்டி, செங்கல்பட்டு மாவட்டத் தலைவர் திரு.D.விவேகானந்தன் ரெட்டி, செயலாளர் திரு.S.தேவதாஸ் ரெட்டி, பொருளாளர் திரு.R.சீனுவாசன் ரெட்டி, காஞ்சிபுரம் மாவட்டத் தலைவர் திரு.S.பூபால் ரெட்டி, செயலாளர் திரு.T.துரைபாபு ரெட்டி, பொருளாளர் திரு.R.ராமகிருஷ்ணன் ரெட்டி, வேலூர் மாவட்டத் தலைவர் திரு.C.கோகுல்தாஸ் ரெட்டி, செயலாளர் திரு.தயாளன் ரெட்டி, பொருளாளர் திரு.பாபு ரெட்டி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துக் கொண்டு நிகழ்ச்சி யினை சிறப்பித்தனர்.

டி.வி.புகழ் தெய்வீக ஜோதிடர் திரு.A.R.பாலகிருஷ்ணா ரெட்டி, திருமலா திருப்பதி தேவஸ்தானம் செய்தி வாசிப்பாளர் திருமதி.திவ்யா உதயபாஸ்கர், திருமலா திருப்பதி தேவஸ்தானம் சொற்பொழிவாளர் செல்வி K.ஆஷா நாச்சியார் ஆகியோர் ஆன்மீக சொற்பொழிவு நடத்தினர்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட, ஒன்றிய, நகர, கிராம ரெட்டி சொந்தங்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். விழுப்புரம் வடக்கு மாவட்ட இளைஞரணி தலைவர் திரு.V.துரைராஜ் ரெட்டி அவர்கள் வந்திருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து கொண்டார். மதிய விருந்துடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது.



# விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்கம்

கடந்த 06.06.2024 வியாழக்கிழமை மாதாந்திர அமாவாசை அன்று [வைகாசி மாதம் 24ம் தேதி] கூவலப்புரம் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆலயத்தில் நண்பகல் 11 மணிக்கு அபிஷேக அலங்கார பூஜையும் தொடர்ந்து அன்னதானமும் நடைபெற்றது.

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம் அ.இராமலிங்காபுரம் தெய்வத்திருவாளர்கள் S.K.A அருணாச்சல ரெட்டியார், இலட்சுமியம்மாள் அவர்களின் நினைவாக அன்னதானம் வழங்கப்பட்டது.

தகவல் : திரு.பெ.இராமகிருஷ்ணன், தலைவர், விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்கம்

# ரெட்டி அறக்கட்டளை நிர்வாகிகள் தேர்வு

திருச்சி காவேரி மகளிர் கல்லூரியை நிர்வகித்து வரும் ரெட்டி அறக்கட்டளைக்கு புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, அறக்கட்டளையின் புதிய நிர்வாக குழுத் தலைவராக லட்சுமி டிரான்ஸ்போர்ட் உரிமையாளர் திரு.கோபால், செயலாளராக ஸ்ரீரங்க நாதன் டிராவல்ஸ் உரிமையாளர் திரு.ராமநாதன், பொருளாளராக கிருஷ்ணா ஸ்வீட்ஸ் உரிமையாளர் திரு.சாரநாதன் ஆகியோர் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

### ஊக்கத் தொகையும், உதவித்தொகையும் வழங்குவது குறித்த

# திருச்சி மாவட்ட ரெட்டி நல சங்கம் அறிவிப்பு

திருச்சி மாவட்ட ரெட்டி நல சங்கத்தின் சார்பாக திருச்சி மாவட்டத்தில் உள்ள ரெட்டி இன மாணவர்களுக்கு நடந்துமுடிந்த 10 மற்றும் 12 ம் வகுப்பு பொதுத் தேர்வில் 85 சதவீதத்திற்கு குறையாமல் மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட உள்ளது.

திருச்சி மாநகர ரெட்டி நல சங்கத்தின் சார்பாக திருச்சி மாவட்டத்தில் உள்ள ஏழ்மை நிலையில் உள்ள நம் இன மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட உள்ளது.

தகுதியுடையோர், மதிப்பெண் சான்றின் நகலில் பின்புறம் வீட்டு முகவரி மற்றும் கைபேசி எண்ணை எழுதி திருச்சி மாவட்ட எல்லைக்குட்பட்ட தங்கள் ஊரில் உள்ள நமது சங்கத்தின் நிர்வாகிகளிடம் கையெழுத்து பெற்று தாஜ் திருமண மண்டபத்தின் பின்புறம் உள்ள நம் சங்க அலுவலகத்தில் 26-06-2024 முதல் 27-07-2024 வரை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

திருச்சி மாவட்டத்திற்கு உட்பட்ட கிளைச் சங்கங்கள் மூலம் பெறப்பட்ட ஊக்கத்தொகை விண்ணப்பங்களை டிரஸ்ட் அலுவலகத்திற்கு மேலே குறிப்பிட்ட தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இந்த வாய்ப்பினை திருச்சி மாவட்ட ரெட்டி இன மாணவ, மாணவிகள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

செயலாளர். திரு.R.இளங்கோ

தொடர்பிற்கு : 94438 37836, 93451 41828, 94435 30304

# பிள்ளையார்நத்தம் கிராமத்தில் OPR சமுதாய நலக்கூடம் திறப்பு விழா

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம் பிள்ளையார்நத்தம் ரெட்டி சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட OPR சமுதாய நலக் கூடம் கடந்த 20–05–2024 திங்கட்கிழமை அன்று திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கோவில்பட்டி K.R.கல்வி நிறுவனம் மற்றும் K.R.குழுமங்கள் நிர்வாக அறங்காவலர் திரு.K.R.அருணாசலம் MBA (USA) அவர்கள் கலந்து கொண்டு சமுதாயக் கூடத்தை திறந்து வைத்தார்.

### அஜீரணத் தொந்தரவுக்கு திராட்சை ஜூஸ்

திராட்சை ஜூஸ் பலதரப்பட்ட நோய்களுக்கு அருமருந்தாக அமைகிறது. அதேவேளையில் நீண்ட நாள் வயிற்றுவலிக்கு உலர்திராட்சை, கடுக்காய், நெல்லிக்காய் வற்றல் சேர்த்துத் தூளாக்கி தேன், சர்க்கரை சேர்த்து காலை, மாலை சாப்பிட்டு வந்தால் பலன் கிடைக்கும். அஜீரணத் தொந்தரவுகளும் சரியாகும்.

### மருந்தாகும் மாதுளைத் தோல்

மாதுளை பழத்தில் மட்டுமல்ல, அதன் தோலுக்கும் மருத்துவ குணம் உள்ளது. மாதுளம்பழத் தோலைப் பொடியாக்கி, தண்ணீர் விட்டுக் குழைத்து முகப்பருக்களின் மீது பூசி வந்தால் பலன் கிடைக்கும். முடி உதிர்தல் பிரச்சனை இருந்தால் இதையே தலையில் பூசுவதன் மூலம் பிரச்சனை சரியாகும். மாதுளம்பழத் தோல் அல்லது தோலின் உள்பகுதியில் வெள்ளை நிறத்தில் காணப்படும் லேயர்களை சாப்பிட்டால் இதய நோய்கள் வராது.

# விழுப்புரம் வடக்கு மாவட்டம் ராமன் ரெட்டி தெலுங்கு பாடசாலை சான்றிதழ் அளிக்கும் விழா



கடந்த 09.06.2024 அன்று மாலை விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் ஆர்யாஸ் கார்டனில் தெலுங்கு பாடசாலை மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கும் விழா இனிதே நடைபெற்றது. கோடை விடுமுறையை முன்னிட்டு ராமன் ரெட்டி தெலுங்கு பாடசாலையில் தெலுங்கு பயின்ற மாணவ, மாணவியர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழா விழுப்புரம் வடக்கு மாவட்டத் தலைவர் தொழிலதிபர் ஆர்யாஸ் திரு.ராமகிருஷ்ணன் அவர்கள் தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சிக்கு திரு.கபீர்தாஸ் அவர்கள் வரவேற் புரை நிகழ்த்தினார். வழக்கறிஞர் திரு.கிருபாகரன், வழக்கறிஞர் திரு.சிதம்பரநாதன், வழக்கறிஞர் திரு.மேத்தா, திரு.தீனதயாளன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளராக சென்னை மண்டலதலைவர் திரு.இரா.ஜெயராமன் ரெட்டி அவர்கள் கலந்துக்கொண்டு சிறப்புரை ஆற் றினார். அதுசமயம் குறுகிய காலத்தில் தெலுங்கு பயின்ற மாணவ மாணவியர்களை பாராட்டியும் சான்றிதழ் வழங்கியும் மற்றும் இணையதளம் மூலம் பயிலும் வகையில் பயிற்சி வகுப்புக்களுக்கான செயலியை தொடங்கி வைத்தார்.

ஆர்யாஸ் திரு.ராமகிருஷ்ணன் தமது தலைமை உரையில், "இந்திய அரசால் ஏற்கப்பட்ட 22 மொழிகளில் தெலுங்கு மொழியும் ஒன்றாகும். இது ஆந்திரா, தெலுங்கானா அல்லாமல் தமிழ்நாடு, கர்நாடக மாநிலத்திலும் அதிக அளவில் பேசப் படுகிறது. நம் தாய்மொழியான தெலுங்கு மொழியை நாம் மறந்து விட்டோம். அதனால் ரெட்டியார் என்கிற அடையாளத்தைக் கூட இழக்க காரணமாகிறோம். நம் முன்னோர்கள் எழுதப் படிக்க தெரிந்திருந்தனர். ஆனால் இன்றளவும் சில பகுதிகளில் பேசப்பட்டாலும் பெரும்பாலானவர்கள் தாய்மொழியை மறந்துவிட்டோம் என்பதே உண்மை. எனவே அதன் அவசியத்தையும், அடை யாளத்தையும் இளம் தலைமுறையினருக்கு சொல்லித் தந்து மீட்டெடுக்கவே இந்த பாடசாலை தொடங்கப்பட்டது. இதை அனைவரும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்" என்றார்.

தெலுங்கு ஆசிரியை திருமதி.புஷ்பா பிரகாஷ் அவர்கள் சிறப்பான முறையில் மாணவ, மாணவிகள் பயிலும் வகையில் பயிற்றுவித்தார். சிறப்பு விருந்தினருக்கும், பயிற்சி வழங்கி ஆசிரியைக்கும் ஆர்யாஸ் திரு.ராமகிருஷ்ணன் அவர்கள் நினைவு பரிசினை வழங்கி கௌரவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாணவ, மாணவியர்கள் அவர்களின் கலைநிகழ்ச்சிகளை தெலுங்கில் பாடியும், உரையாற்றியும் மிகச்சிறப்பாக நிகழ்த்தி காட்டினர்.

ரெட்டி நலச்சங்க நிர்வாகிகளான திரு.புண்ணியமூர்த்தி, திரு.கார்த்திக்பாபு, திரு.முத்துகிருஷ்ணன், திரு.புருஷோத்தமன், திரு.ராம்குமார், திரு.வைத்தியநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் மாணவ, மாணவியர்களின் பெற்றோர்கள் திரளாக கலந்துக் கொண்டனர்.

விழுப்புரம் மண்டல இளைஞரணி நிர்வாகி திரு.கார்த்திக் நிறைவாக நன்றி தெரிவித்தார்.



# 10ம் வகுப்பு மற்றும் +2 தேர்வில் 400க்கு மேல் மதிப்பெண் பெற்ற நம் ரெட்டி இன முத்துக்கள்

| | |
|---|---|
| தமிழ் | 097 |
| ஆங்கிலம் | 099 |
| கணிதம் | 100 |
| அறிவியல் | 100 |
| சமூக அறிவியல் | 099 |



தொட்டியம் கௌடாம்பிகா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 10ம் வகுப்பு படித்த **S.மிருதுளா** அவர்கள் 500க்கு 495 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். இவர் திருச்சி R.செல்வராஜ்—R.மோகனசுந்தரி அவர்களின் மகளாவார்.

| | |
|---|---|
| தமிழ் | 082 |
| ஆங்கிலம் | 092 |
| கணிதம் | 100 |
| அறிவியல் | 098 |
| சமூக அறிவியல் | 099 |



பெருமாள்பாளையம் த.நா.அரசு மேல்நிலைப் பள்ளியில் 10ம் வகுப்பு படித்த **K.புகழேஷ்** அவர்கள் 500க்கு 471 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். இவர் துறையூர் கிருஷ்ணகுமார்—தேவி அவர்களின் மகனாவார்.

| | |
|---|---|
| தமிழ் | 096 |
| ஆங்கிலம் | 099 |
| கணிதம் | 100 |
| அறிவியல் | 097 |
| சமூக அறிவியல் | 100 |



தருமபுரி கம்பைநல்லூர் பூமிசமுத்திரம் ஸ்ரீராம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 10ம் வகுப்பு படித்த **R.கீர்த்தி** அவர்கள் 500க்கு 492 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். இவர் தருமபுரி கடத்தூர் A.ரமேஷ்—S.தீபா அவர்களின் மகளாவார்.

| | |
|---|---|
| தமிழ் | 098 |
| ஆங்கிலம் | 097 |
| கணிதம் | 100 |
| அறிவியல் | 097 |
| சமூக அறிவியல் | 097 |



திருச்சி சேவா சங்கம் மேல்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு படித்த **R.தாரணி** அவர்கள் 500க்கு 489 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். இவர் கரூர், குளித்தலையைச் சேர்ந்த N.ராமசாமி—R.லதா அவர்களின் மகளாவார்.

| | |
|---|---|
| தமிழ் | 097 |
| ஆங்கிலம் | 089 |
| இயற்பியல் | 100 |
| வேதியியல் | 098 |
| உயிரியல் | 100 |
| கணிதம் | 100 |




செல்லிப்பாளையம் மேல்நிலைப்பள்ளியில் +2 படித்த **R.மோஷிதா** அவர்கள் 600க்கு 584 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். இவர் செல்லிப் பாளையம் திரு.ரங்கராஜ்—ரம்யா அவர்களின் மகளாவார்.


ரெட்டி இளைஞர் பேரவை நடத்தும்

## ரெட்டி திருமணத் தகவல் மையம்

**எண் : 34A, கங்கையம்மன் கோவில் தெரு,**
**ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083.**
**044 - 2485 3333, 9688877700,**
**E-mail Id : reddymatrimonired@gmail.com**
**For Online Registration Website : www.reddymatrimony.co.in**

நிறைவான சேவைக்கு சரியான சாய்ஸ் இம்மையம்.
வேலை நேரம் : காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
(வார விடுமுறை கிடையாது)


## 10 மற்றும் +2 வகுப்பு மாணவ—மாணவிகளே!

10 மற்றும் 12ம் வகுப்பு மற்றும் CBSE தேர்வு முடிவுகள் வெளிவந்துள்ளன. இதில் அதிக மதிப்பெண் பெற்றுள்ள நம் ரெட்டி சமூக மாணவ, மாணவிகளின் விவரங்கள் அடுத்து வரும் ரெட்டி மலர் இதழில் புகைப்படத்துடன் வெளியிட இருக்கிறோம். எனவே 10ம் வகுப்பில் 450 மதிப்பெண்களுக்கு மேலும், 12ம் வகுப்பில் 550 மதிப்பெண்களுக்கு மேலும் பெற்றிருக்கும் குழந்தைகளின் புகைப்படம் மற்றும் மதிப்பெண் சான்றிதழின் நகலை ரெட்டி மலர் அலுவலகத்திற்கு **01.07.2024**க்குள் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். மாணவ, மாணவிகள் பயின்ற பள்ளி, பெற்றோர்களின் பெயர் (தாய், தந்தை) மற்றும் முகவரி, தொலைபேசி எண் குறித்த விவரங்களுடன் மதிப்பெண் பட்டியல் Xerox நகலையும் தவறாது அனுப்பி வைக்க கேட்டுக்கொள்கிறோம். நம் குழந்தைகளை கல்வித்துறையில் ஊக்கப்படுத்தவே இந்த வெளியீடு. எனவே தங்களின் குழந்தைகள் குறித்த விவரங்களை தவறாமல் ரெட்டி மலர் அலுவலத்திற்கு அனுப்பி வைத்து ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

வெளியீட்டாளர்.

**அனுப்ப வேண்டிய முகவரி :**

**எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை, சென்னை – 600 083.**

# நீலாம்பாள் துரைசாமி ரெட்டியார் முதியோர் இல்லம் விஸ்தரிப்பு





திருவண்ணாமலை மாவட்ட பண்ட ரெட்டியார் சங்கத்தின் மூத்த உறுப்பினர் திருமதி.நீலாம்பாள் துரைசாமி ரெட்டியார் அவர்களால் மேக்களூர் ஊராட்சியில் பண்ட ரெட்டியார் சங்கத்தால் K.விஸ்வநாதன் ரெட்டியார் தோட்டத்தில் அமைந்துள்ள **"திருமதி.நீலாம்பாள் துரைசாமி ரெட்டியார் முதியோர் இல்லம்"** செயல்பட்டு வருகிறது. இந்த முதியோர் இல்லத்தில் கூடுதலாக ஆறு அறைகள் கட்டி முடிக்கப்பட்டு கடந்த 10-06-2024 திங்கட்கிழமை கூடுதல் அறைகள் திறப்பு விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு திருமதி நீலாம்பாள் துரைசாமி ரெட்டியார் அவர்கள் தலைமை தாங்கினார். நீலாம்பாள் அறக்கட்டளையின் தலைவர் திரு.N.தேவராஜன், பண்ட ரெட்டி சங்கத் தலைவர் திரு.S.பிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருவண்ணாமலை மாவட்ட பண்ட ரெட்டியார் சங்க செயலாளர் திரு.R.வீரமணி ரெட்டியார் வரவேற்புரை நிகழ்த்தினார்.

நிகழ்ச்சியில் புதிய கூடுதல் அறைகளை அனைத்து கேரளா ரெட்டியார் சங்க கூட்டமைப்பின் தலைவரும், Trans World உரிமையாளருமான திரு.R.சங்கர் ரெட்டியார், துணைத் தலைவர் திரு.R.ஆனந்தகிருஷ்ணன் ரெட்டியார், பொருளாளர் திரு.R.ஜனார்த்தனன் ரெட்டியார், பொதுச்செயலாளர் திரு.R.ரமேஷ்குமார் ரெட்டியார், அனுஜ் டைல்ஸ் நிர்வாக இயக்குனர் திரு.R.குமார் ரெட்டியார் ஆகிய சிறப்பு விருந்தினர்களும், ஏராள மான பொது மக்களும் கலந்துக் கொண்டனர்.

அது சமயம் அனைத்து கேரளா ரெட்டியார் சங்க கூட்டமைப்பின் தலைவர் திரு.R.சங்கர் ரெட்டியார் அவர்கள் கூடுதல் அறைகளை திறந்து வைத்து வாழ்த்தி பேசும் போது, "வசதிவாய்ப்புகள் இருந்தும் சில முதியோர்களை தனிமை வாட்டுகிறது. மனம் விட்டு பேச வீட்டில் யாரும் இல்லாததால் சில முதியோர்கள் தாங்களே விரும்பி முதியோர் இல்லத்தில் அடைக்கலம் புகுந்து கொள்கிறார்கள். இந்த அவலநிலை மாற ஒவ்வொரு மனிதனும் சிந்திக்க வேண்டும். இன்று அவர்கள் என்றால் நாளை நீங்கள் என்பதை இளைஞர்கள் புரிந்து கொள்ளவேண்டும். ஒவ்வொருவரும் பெற்றத் தாய்க்கும், தந்தைக்கும் தன்னுடைய கடமையை செய்தாலே போதும். கோயில், குளங்களுக்குச் சென்று புண்ணியம் தேடவேண்டிய அவசியம் இல்லை. இந்த முதியோர் இல்லத்திற்கு உதவி செய்து வரும் அனைவரையும் பாராட்டுகிறேன்" என்றார்.



அனுஜ் டைல்ஸ் நிர்வாக இயக்குனர் திரு.R.குமார் ரெட்டி அவர்கள் பேசும் போது, "வாழும் வள்ளல் திருமதி நீலாம்பாள் துரைசாமி ரெட்டியார் அவர்கள் மேக்களூர் கிராம விவசாயக் குடும்பத்தில் பிறந்து தன் வாழ்க்கையை கல்வி வளர்ச்சிப் பணிக்காகவும், ஆலய புணரமைப்பு பணிக்காகவும் மேக்களூர் வீட்டையே நன்கொடையாக முதியோர் இல்லம் கட்டுவதற் காகவும் அர்ப்பணித்த வள்ளல். அந்த முதியோர் இல்லத்திலேயே அவரும் ஆசையுடன் தங்கி தன் மீதி வாழ்நாளை கழித்துக் கொண்டிருக்கிறார். இதற்கு மேலாக கடலூர் வீட்டையும் பண்ட ரெட்டி சங்கத்திற்கு தானமாக தந்த கொடை வள்ளல். எல்லாவற்றையும் தானமாக வாரி வழங்கிய திருமதி நீலாம்பாள் துரைசாமி ரெட்டியார் அவர்கள் நீடுழி வாழ்க, வாழ்க என ஆண்டவனை வேண்டிப் பிரார்த்தனை செய்கிறேன். இந்த முதியோர் இல்லம் சீரும், சிறப்புமாக நடைபெற என்றென்றும் நாம் அனைவரும் உறுதுணையாக இருப்போம்" என்றார்.

இந்த முதியோர் இல்லத்தில் 10 ஆண்கள், 22 பெண்கள் என 32 முதியோர்கள் தங்கி உள்ளனர். நிகழ்ச்சியின் போது சிறப்பு பூஜையும், மரக்கன்று களும் நடப்பட்டது.

நிகழ்ச்சியின் போது நம் ரெட்டியார் இனம் மட்டுமல்லாமல் நாயுடு, செட்டியார், முதலியார் இனத்தைச் சேர்ந்த வசதி படைத்த நன்கொடை யாளர்கள் பலரும் முதியோர் இல்ல விரிவாக்கப் பணிகளுக்காக நன்கொடை வழங்கினார்கள். நிகழ்ச்சியில் திருமதி.நீலாம்பாள் துரைசாமி ரெட்டியார் மற்றும் நன்கொடையாளர்கள் பலரும் கௌரவிக்கப்பட்டனர்.

நிறைவாக நீலாம்பாள் அறக்கட்டளை செயலாளர் திரு.R.ராஜா ரெட்டியார் அவர்கள் நன்றி தெரிவித்தார்.

தகவல் : திரு.சுந்தரபாண்டியன்,
திருவண்ணாமலை

# இலங்கை ரெட்டியார் சங்க காரியாலயம் திறப்புவிழா





இலங்கைத் தீவு முழுவதும் பரந்து காணப்படும் ரெட்டி உறவுகளை ஒன்றிணைத்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு இலங்கை ரெட்டியார் சங்கம் 2012 செப்டம்பர் 23 அன்று போசகர் திரு.N.சீனிவாசகன் அவர்களுக்கு சொந்தமான இலக்கம்.123/M, புதுச்செட்டியார் தெரு, கொழும்பு—11 என்ற இடத்தில் தொடங்கப் பட்டது. தற்போது கடந்த 16-06-2024 அன்று கொழும்பில் சொந்தமாக இலங்கை ரெட்டியார் சங்க காரியாலயம் திறந்து வைக்கப்பட்டது. இலங்கை ரெட்டியார் சங்கத்தலைவர் திரு.ஆர்.மகேஷ்வரன் ரெட்டியார் தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது.

அதுசமயம் மலையகக் கல்வி அபிவிருத்தி மன்ற தலைமை போசகரும், தேவி ஜூவல்லர்ஸ் பிரைவேட் லிமிடெட் அதிபருமான திரு.என்.சீனிவாசகம் (என்.எஸ்.வாசு) ரெட்டியார் அவர்கள் காரியாலயத்தை உத்தியோகப்பூர்வமாக திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் போசகர் திரு.ஆர்.விஜயபாலன் ரெட்டியார், ஆலோசகர்களான திரு.ஆர்.சீதாராம் ரெட்டியார், திரு.ஆர்.ரெங்கராஜன் ரெட்டியார், செயலாளர் திரு.D.முரளிதரன் ரெட்டியார், உப தலைவர் திரு.நிரஞ்சன் குமார் ரெட்டியார், நிர்வாக சபை உறுப்பினர்களான திரு.என்.தங்கராஜூ ரெட்டியார், திரு.ஆர்.ராஜேஷ் கண்ணன் ரெட்டியார், திரு.ஆர்.சுரேஷ்குமார் ரெட்டியார், திரு.ரவிராஜா ரெட்டியார், திரு.P.சுரேஷ் ரெட்டியார், திரு.சரவணன் ரெட்டியார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் உரையாற்றிய பலரும் ரெட்டியார் சங்கத்திற்கென தனியான காரியாலயம் ஒன்று கொழும்பில் திறக்கப்படுவது வரவேற்கக்கூடியது.



இதற்கு தமது சொந்தக் கட்டடத்தை தந்து உதவிய தலைவர் திரு.ஆர்.மகேஷ்வரன் ரெட்டியார் அவருக்கு நன்றி கலந்த பாராட்டினை தெரிவித்து கொண்டனர். அவரது இந்த முயற்சி காரணமாக இன்று ரெட்டியார் சங்கம் தலை நிமிர்ந்து இருப்பதாக சிலர் தமது கருத்தில் தெரிவித்தனர்.



மேலும் சங்க உறுப்பினர்களின் நன்மைக்கருதி தனியான திருமண மண்டபம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்றார். இங்கு உரையாற்றிய போசகர் திரு.ஆர்.விஜயபாலன் உரையாற்றியபோது, “சாதி மற்றும் இனரீதியான சங்கங்களின் செயற்பாடு காரணமாக இந்துசமயம் கட்டியெழுப்பப் படுகின்றது. இந்த சங்கத்திற்கென்று திருமண மண்டபம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இது வரவேற் கத்தக்க விஷயமாகும். கொட்டகலையில் திருமண மண்டபம் அமைக்க தாம் உதவுவதாக தெரிவித்தார்.

இலங்கை ரெட்டியார் சங்கத்தலைவர் திரு.ஆர்.மகேஷ்வரன் ரெட்டியார் அவர்கள் தமது தலைமை உரையில், “நம் உறவுகள் கல்வியில் உயர்நிலை அடைவதுடன், அவர்கள் பொருளாதார ரீதியில் உயர்வடைந்து சுய கௌரவத்துடன் வாழவேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் முறைப்படி 2014 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டு பல்வேறு உறவுகள் ஒன்றுகூடும் நிகழ்ச்சி நடத்தப் பட்டது. சொந்தமாக காரியாலயம் அமைய முடிவெடுத்து தற்போது திறந்து வைக்கப் பட்டுள்ளது. இதனை அனைவரும் உபயோகப் படுத்திக் கொண்டு உயர்வடைய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்” என்றார்.

# நிறைவான சேமிப்பு, வளமான வாழ்வு

இந்த ஜூன் மாதத்தில் நீங்கள் மனதில் கொள்ள வேண்டிய சில முக்கியமான நிதி சம்பந்தமான விஷயங்கள்.

**ஜூன் மாதத்தில் என்ன செய்ய வேண்டும்?**

தேர்தல் முடிவுகளில் கவனம் செலுத்தியது போதும். ஜூன் மாதம் பலருக்கும் மிகவும் முக்கிய மான மாதம். இந்த மாதத்தில் உங்கள் வங்கி மற்றும் கேபிடல் கெயின்ஸ் ஸ்டேட்மெண்ட் Salary Slips ஆகியவற்றை பார்க்க தொடங்குங்கள்.

**மியூச்சுவல் பண்ட்களில் நாமினி**

கூடுதலாக, இன்னும் சிலவற்றையும் நீங்கள் கவனிக்க வேண்டும். உதாரணமாக உங்கள் மியூச் சுவல் ஃபண்ட் முதலீடுகளுக்கு உங்கள் வருமான வரி ரிட்டர்ன் தாக்கல் செய்தல் மற்றும் பல.

அக்டோபர் 1, 2022 முதல் உருவாக்கப்பட்ட ஃபோலியோக்களுக்கு புதிய மியூச்சுவல் ஃபண்ட் முதலீட்டாளர்களின் விஷயத்தில் நாமினி நியமனம் அல்லது விலகல் உறுதிப்படுத்தல் ஏற்கனவே கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அக்டோபர் 1, 2022க்கு முன் மியூச்சுவல் பண்ட் ஃபோலியோக்கள் வைத்திருக்கும் தங்கள் போலியோக்களில் ஜூன் 30, 2024க்கு முன் நாமினி விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

**அட்வான்ஸ் டாக்ஸ்**

முதல் முன்கூட்டிய (Advance tax) தவணைக்கான காலக்கெடு ஜூன் 15 ஆகும். அப்படி ஏதும் செலுத்த வேண்டியிருந்தால் செய்துவிடவும்.

நீங்கள் சம்பளம் பெறும் தனிநபராக இருந்து, முன்கூட்டிய வரி விதி உங்களுக்குப் பொருந்தாது என நினைத்தால், நீங்கள் தவறாக நினைக்கிறீர்கள். முதன்மை வருமானமாக சம்பளம் உள்ள ஒரு நபருக்கு முன்கூட்டிய வரி பொறுப்பும் ஏற்படலாம். வைப்புத்தொகை, வாடகை வரு–மானம், மூலதன ஆதாயங்கள் மற்றும் பலவற் றிலிருந்து வட்டி போன்ற பிற ஆதாரங்களில் இருந்து வருமானம் பெறலாம். எனவே, உங்கள் முன்கூட்டிய வரிப் பொறுப்பை நீங்கள் மதிப்பிட வேண்டும்.

வருமான வரிச் சட்டம் 1961இன் பிரிவு 208ன்படி, நிதியாண்டில் ரூ.10,000 அல்லது அதற்கும் அதிக மாக வரிப் பொறுப்பு இருக்கும் ஒவ்வொரு நபரும், வரிவிலக்கு மற்றும் மூலத்தில் (டிடிஎஸ் மற்றும் டிசிஎஸ்) வசூலிக்கப்படும் வரியைக்கருத்தில் கொண்டு முன்கூட்டியே வரி செலுத்தவேண்டும்.

வரிசெலுத்துவோர் தங்களின் வருடாந்திர மதிப்பிடப்பட்ட முன்கூட்டிய வரி பொறுப்பை நான்கு தவணைகளில் செலுத்தவேண்டும். அவர்கள் முன்கூட்டிய வரியில் 15 சதவீதத்தை ஜூன் 15 அல்லது அதற்கு முன் செலுத்தவேண்டும்.

நீங்கள் முன்கூட்டியே வரி செலுத்துவதை தவற விட்டால் அல்லது அவற்றைத் தாமதப்படுத்தினால் 234C பிரிவின் கீழ் மாதம் மாதம் ஒரு பகுதிக்கு 1 சதவீதம் என்ற விகிதத்தில் செலுத்த வேண்டிய வரிகளுக்கு அபராத வட்டி உண்டு.

**வருமான வரிக் கணக்கை தாக்கல் செய்ய...**

2023-24 நிதியாண்டுக்கான வருமான வரிக் கணக்கை தாக்கல் செய்ய தயாராகுங்கள்.

அதாவது மதிப்பீட்டு ஆண்டு 2024-25. ஜூலை 31 வரை உங்கள் வருமானத்தை தாக்கல் செய்ய உங்களுக்கு நேரம் இருக்கிறது. ஜூன் 15ஆம் தேதிக்கும் Form16ஐப் பெறுவீர்கள். ஜூன் மாதத்தில் உங்கள் வங்கி மற்றும் மூலதன ஆதாய அறிக்கைகள், சம்பளச் சீட்டுகள் மற்றும் பலவற்றை நீங்கள் பார்க்கத் தொடங்கவும். இது கடைசி நிமிட அவசரத்தையும், அதன் விளைவாக ஏற்படும் தவறு–களையும் தடுக்க உதவும். உங்கள் Form 16ஐப் பெற்ற வுடன், எந்தவொரு IT ரிட்டர்ன் தாக்கல் போர்ட்டல் குறைபாடுகள் அல்லது அதிக டிராபிக் காரணமாக இடையூறு ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்ய ஜூலை 31 வரை காத்திருக்காமல் ரிட்டர்ன் பைல் செய்ய முன்னரே தொடங்கலாம்.

**செலவு**

செலவு செய்யத் தெரிந்தவன் தான் வாழத் தெரிந்தவன். எப்படி செலவு செய்ய வேண்டும்? யார் செலவு செய்ய வேண்டும்? என்பது தான் கேள்வி.

ஈட்டத்தெரிந்தவன் தான் செலவு செய்ய வேண்டும். முன்னோர் தேடித்தந்த சொத்து, பணங்களை வைத்து செலவு செய்பவன் ஊதாரி. வருமானம் செய்யாமல் செலவு செய்பவன் மடையன். வரவுக்குத் தகுந்த செலவை கைக்கு அடக்கமாக செய்பவன் வாழத் தெரிந்தவன்.

ஒரு ரூபாயை நான்கு ரூபாயாகப் பெருக்கத் தெரிந்தவன் மட்டுமே கடனும் வாங்கலாம், செலவும் செய்யலாம்.

உழைப்பின் உயர்வைப் பற்றித் தெரியாதவன், செலவு செய்வதில் மிகக் கவனமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு காசும் ஒவ்வொரு நிமிடமும் கண்ணும் கருத்துமாக செலவிட வேண்டியவர் களாவோம்.

காசில்லாதவனை, யாரும் மதிக்கப் போவதில்லை. தான் செய்யும் செலவைப் பார்த்து யாரும் மயங்கி விடமாட்டார்கள். வரவு செய்யத் தெரிந்தவன் கட்டாயம் செலவுச் செய்ய கடமைப் பட்டுள்ளான். நல்ல காரியங்களுக்குத் தானே சென்று கொடுக்கவேண்டும். வீடு தேடி வந்தவர்களுக்கு இல்லையென்று சொல்லாமல் கொடுப்பவன் தான் மனிதன்.

சிக்கனம் வேறு கருமித்தனம் வேறு. சிக்கனமாய் வாழ்பவன் சிறந்த மனிதன். கருமியாய் இருப்பவன் தானும் அனுபவிக்காமல் பிறருக்கும் கொடுக்காமல் சேர்த்து வைப்பவன் மடையன்.

செலவழித்தால் இன்பமாக வாழலாம். பலருக்கு கொடுக்கும் போது பலர் நம்மை அணுகுவார்கள். வீடு கலகலப்பாய் இருக்கும். ஒரு காரியம் செய்ய செலவழிக்காதவன் இரண்டு முறை செலவழித்து சாதிக்க வேண்டி வரும். கருமிக்கு இரு செலவென்பார்கள். வியாதி வந்து கஷ்டப்பட வேண்டியிருக்கும்.

கோயிலுக்கு கொடுங்கள். படிப்பிற்கு கொடுங்கள். திருமணம் செய்து வைத்து புண்ணியம் தேடிக்கொள்ளுங்கள். கடன் வாங்கி கடன் கொடுக்காதீர்கள். பெருமைக்காக தகுதிக்கு மீறி தானம் செய்யாதீர்கள். அன்னதானம் பல பிரச்சனை களை தீர்க்கும். கணக்கான வாழ்க்கை வாழ்ந்தால், குன்றில் மேலிட்ட விளக்காகப் பலருக்கு எடுத்துக் காட்டாக வாழலாம். செலவு செய்வதில்தான் இன்பம் இருக்கின்றது. இறைக்கின்ற கேணிதான் ஊறும்.

**தேவையான செலவு செய்வோம்,**
**சிறப்பாக வாழ்வோம்!**

# கொட்டிக் கிடக்கும் மானியங்கள்





பழங்கள் மற்றும் காய்கறிகளின் வாழ்நாட்களை அதிகரிப்பதற்கான நவீனக்கருவிகள், தொழில்நுட்பங்கள் மற்றும் மத்திய மாநில அரசுகள் அளித்து வரும் உதவிகள் குறித்து இப்போது பார்ப்போம்.

மற்ற நாடுகளோடு ஒப்பிடும்போது இந்தியாவில் குளிர்பதனக் கிடங்குகள் மிகவும் குறைவான எண்ணிக்கையில் தான் இருக்கின்றன. சமீபகாலமாக இதனுடைய நன்மைகள் குறித்து விவசாயிகள் ஓரளவுக்கு அறிந்து வைத்திருந்தால் கூட இவற்றை உருவாக்குவதில் யாரும் பெரிய அளவில் முனைப்பு காட்டுவதில்லை.

குளிர்பதனக் கிடங்குகளுக்கான நவீனக் கருவிகளை வெளிநாடுகளில் இருந்துதான் இறக்குமதி செய்தாக வேண்டும். இவற்றில் ஏதேனும் தொழில்நுட்பக் கோளாறுகள் ஏற்பட்டால் உடனடியாக சரி செய்ய தொழில்நுட்ப வல்லுநர்கள் இங்கு கிடைக்கமாட்டார்கள் என்கிற எண்ணமும் தயக்கத்துக்கு ஒரு காரணம்.

உண்மையில் குளிர்பதனக் கிடங்குகளை அன்னியமாகப் பார்க்க வேண்டியதில்லை. நம் நாட்டிலேயே புனே, பெங்களூரு, சென்னை உள்ளிட்ட பெருநகரங்களில் இதற்கான அனைத்து நவீனக்கருவிகளும் மிக எளிதாகக் கிடைக்கின்றன. இவற்றை நிறுவுவதற்கென்றே சில தனியார் நிறுவனங்களும் இயங்கி வருகின்றன. தொழில்நுட்ப வல்லுநர்களும் எளிதாகக் கிடைக்கிறார்கள். இதற்கான கட்டுமானங்களை சிக்கமான செலவில் அமைக்கும் வழிமுறைகள், நியாயமான விலையில் தரமான சாதனங்கள் கிடைக்கும் இடங்கள் உள்ளிட்ட அனைத்து வழிகாட்டுதலுக்கும் எங்களுடைய இந்தியப்பயிர் பதனத்தொழில் நுட்பக் கழகத்தை' விவசாயிகள் அணுகலாம். எங்களுடைய வல்லுநர்கள் உதவி செய்யத்தயாராக இருக்கிறார்கள்.

குளிர்பதனக் கிடங்குகளை உருவாக்க, மத்திய அரசு மிக அதிக அளவில் நிதி உதவிகளை வழங்கி வருகிறது. தேவைக்கேற்ப குளிர்பதனக் கிடங்கை உருவாக்கிக்கொள்ள, மொத்த மதிப்பீட்டில் 50 சதவிகிதத்தை மானியமாகப் பெற முடியும். ஒரு நபர் அதிகபட்சமாக 10 கோடி ரூபாய் வரை மானியம் பெற முடியும். இதற்கு விண்ணப்பிப்பவர், மொத்த மதிப்பீட்டில் ஒன்றரை சதவிகிதம் சொத்து உடையவராக இருந்தாலே போதும். மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களை அணுகினாலும், இதுபற்றிய விவரங்கள் கிடைக்கும். இதற்கான மானியத்தைப் பெற, அங்கேதான் விண்ணப்பிக்க வேண்டும். உணவு பதப்படுத்தும் தொழில்களின் வளர்ச்சிக்காக, மத்திய அரசு, உணவு பதப்படுத்தும் அமைச்சகத்தின் மூலமாக, இன்னும் ஏராளமான உதவிகளையும், திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக 11 மற்றும் 12-ம் ஐந்தாண்டுத் திட்டங்களில் இதற்கெனச்சிறப்பு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில், தற்போது செயல்பாட்டில் உள்ள சில திட்டங்களைப் பற்றிப் பார்ப்போம்.

பதப்படுத்தும் தொழிற்கூடம் தொடர்பான திட்டங்கள் அதிகமான உணவைப்பதப்படுத்துவது, அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பைக்குறைப்பது, வேளாண் விளைபொருட்களின் மதிப்பை அதிகப்படுத்துவது, இவற்றின் மூலமாக விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்குவது, இவைதான் இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்.

நம் நாட்டில் விளையும் விளை பொருட்களிலிருந்து மதிப்புக் கூட்டிய பொருட்களைத் தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் இந்தத் திட்டம் ஊக்கமளிக்கிறது. உணவு பதப்படுத்தும் தொழிலுக்கான புதிய தொழிற் கூடங்களை உருவாக்கவும், ஏற்கெனவே அமைந்துள்ள தொழிற்கூடத்தை விரிவாக்கம் செய்யவும், மேம்படுத்தவும், இந்தத் திட்டத்தின் மூலம் நிதி உதவி பெறலாம்.

பழங்கள், காய்கறிகள் மட்டுமல்லாமல் எண்ணெய் வித்துகள், பயறு வகைகள், நெல், பால், மீன், இறைச்சி, காளான், தேங்காய், வாசனைப் பொருட்கள் உள்ளிட்டவற்றுக்கான பதப்படுத்தும் தொழிற்கூடத்தை உருவாக்கவும் மானியம் பெறலாம். நெல் அரைக்கும் ஆலை, மாவு அரைக்கும் ஆலைகளை உருவாக்கவும் மானியம் பெறலாம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இந்தத் திட்டத்தின் மூலம் ஒரு தொழிற்சாலையின் மொத்த மதிப்பீட்டில் 25 சதவிகிதம் [அதிகபட்சமாக 50 லட்ச ரூபாய்] வரை மானியம் பெற முடியும்.

### மதிப்புக் கூட்டுதல் தொடர்பான திட்டங்கள்

பண்ணைகளிலேயே குறைந்தபட்சம் பதப்படுத்தும் மையம், எடை போடும் இயந்திரம், தரம் பிரிக்கும் இயந்திரம், நடமாடும் முன் குளிர்வித்தல் கருவி, விளைபொருட்களை குளிர்ந்த நிலையிலேயே தொலைதூரத்துக்கு எடுத்துச் செல்லும் வாகனம், குளிர்பதனக் கிடங்கு, விளைப்பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான மையம் உள்ளிட்டவற்றை ஏற்படுத்திக்கொள்ள இந்தத் திட்டத்தின் கீழ் 50 சதவிகிதம் மானியம் கிடைக்கிறது.

### தொழில்முனைவோர்களை உருவாக்கும் திட்டம்

கிராமப்புற இளைஞர்களையும் விவசாயிகளையும் உணவு பதப்படுத்தும் தொழில்முனைவோர்களாக மாற்றுவதற்காகவே இந்தத்திட்டத்தை மத்திய அரசு உருவாக்கியுள்ளது. 25 நபர் முதல் 30 பேருக்கு 6 வாரம் பயிற்சி அளிக்க, சுமார் 2 லட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. மத்திய, மாநில அரசுகளின் அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் 20 நபர்களுக்கு 10 நாட்கள்

பயிற்சி அளிக்க, ஒரு லட்சம் ரூபாய் வழங்கப் படுகிறது. இதுபோல் இன்னும் ஏராளமான திட்டங்கள் உள்ளன. மாவட்ட ஆட்சியர் அலுவல கங்களை அணுகினால், இன்னும் பல தகவல் களைத்தெரிந்து கொள்ளலாம். www.mofpi.nic.in என்ற இணைய தளத்தில் உணவு பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டும் தொழில் தொடர்பான விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

தமிழ்நாட்டுக்கு என்றே பிரத்யேகமான விளை பொருட்கள் நிறைய இருக்கின்றன. அவற்றை யெல்லாம் முறையாகப் பாதுகாத்து, மதிப்புக் கூட்டி, சந்தைப்படுத்தும்போது, நிச்சயமாக அது லாபத்துக்கு உத்தரவாதம் தருவதாக இருக்கும்.

# செரிமானத்தை சரியாக்கும் ஓமம்

**மருத்துவப் பகுதி**



உருவத்தில் சீரகத்தைப் போன்று இருந்தாலும், அதைவிட சிறியதாக வும், கோள வடிவிலும் இருக்கும் ஓமம், டிராகைஸ் பெர்மம் அம்மி என்ற தாவரவியல் பெயரால் அழைக்கப்படுகிறது.

செலரி, கொத்துமல்லி, சோம்பு, பார்சிலி போன்ற உணவுத் தாவரங்களை உள்ளடக்கிய அப்பியேசியே தாவரக்குடும்பத்தை சார்ந்த ஓமம் செடி, பூத்த பிறகு காய்த்து, பழுத்து, சிறு விதை களைக் கொடுக்கிறது. அதைத்தான் ஓமமாகப் பயன்படுத்துகிறோம். உலகளவில், ஈரான், ஈராக், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் போன்ற நாடுகளில் பரவலாகப் பயிரிப்பட்டாலும், எகிப்துதான் ஓமத்தின் தாயகமாகக்கருதப்படுகிறது. இந்தியாவில், குஜராத், ராஜஸ்தான், மத்தியபிரதேசம், ஆந்திரபிரதேசம் போன்ற மாநிலங்களில் ஓமம் அதிகம் பயிரிடப்படுகிறது.

ஓமத்தை சிறிதளவே பயன்படுத்தினாலும், அதன் காரம் மற்றும் நெடி அதிக நேரம் இருக்கும். இருப்பினும், ஊறுகாய், சாஸ், ரொட்டி போன்றவற் றில் செரிமானத்திற்காக ஓமம் சேர்க்கப்படுகிறது. குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் உணவாகப் பயன்படுத்தப்படும் ஜாம் வகைகளில் ஓமம் சேர்க்கப்படுகிறது. இந்திய உணவுகளில், சப்பாத்தி, பிரெட், ரஸ்க், கேக் வகைகள் போன்றவற்றில் ஓமம் பயன்படுத்தப்படுவதுடன், குழம்பு, ரசம், உருளைக் கிழங்கு வறுவல், பருப்பு வகை சுண்டல் போன்றவற் றிலும், எளிமையான செரிமானத்திற்காகவும், வாயுப்பிடிப்பைத் தவிர்ப்பதற்காகவும் ஓமம் பயன்படுத்தப்படுகிறது.

உணவாக மட்டுமல்லாமல், மருந்தாகவும் ஆயுர்வேத, சித்த மருந்துகளிலும், வீட்டு வைத்தியப் பொருளாகவும் ஓமம் பயன்படுத்தப்படுகிறது. மிகக் குறிப்பாக, பிறந்த குழந்தைகளுக்கு ஒரு வயது வரையில் ஏற்படும் செரிமானக் கோளாறு, வயிறு உப்புசம், மந்தநிலை, வயிற்றுவலி போன்றவற்றிற்கு கொதிக்கவைத்து ஆறவைத்த ஓமநீர் அருமருந்தாகும். இதைப் பக்குவப்படுத்தி, இனிப்புச் சுவை கலந்து "ஓம வாட்டர்" என்னும் ஓம நீர் சிறு குழந்தைகள் இருக்கும் வீட்டில் நிச்சயம் இருக்கும்.

பண்டைய காலங்களில், மாதவிடாய் வயிற்று வலிக்கு, ஓமத்தை கருப்பு உப்புடன் சேர்த்து அரைத்துப் பற்றுப்போடும் பழக்கம் இருந்துள்ளது. மேலும், ஓமப்பொடியை நெய் மற்றும் சர்க்கரையுடன் சேர்த்து உண்பதால், சீரான இடைவெளியுடன் இல்லாத மாதவிடாய்க்கு குணம் கிடைப்பதாகவும் நம்பப்பட்டது.

ஓமத்திலிருந்து பிரித்தெடுக்கப்படும் ஓம எண்ணெய்யில் "தைமோல்" என்ற வேதிப்பொருள் ஓமத்திற்கான தனிப்பட்ட சுவையைக்கொடுக்கிறது. தைமோலுடன் சேர்ந்து, கார்வாக்ரோல் என்னும் பொருள், வயிற்றில் இருக்கும் தீமை செய்யும் பாக்டீரியாக்களைக்கட்டுப்படுத்துவதுடன், உணவால் ஏற்படும் தொற்றுகளுக்கும் மருந்தாகப் பயன்படுகிறது. மூக்கடைப்பு, மூக்கில் நீர் ஒழுகுதல், தொண்டையில் தொற்று இருக்கும் நிலையில், ஓமத்தைப்புகையாக்கி நுகர்வதால், குணம் கிடைக்கும்.

தொண்டை வலி மற்றும் தீவிர காய்ச்சல் நிலையிலிருந்து குணம்பெறும் போது, சுவையின்மை ஏற்படும் நிலையில், ஓமத்தை சிறிது வாயில் போட்டுக் கொள்வதாலும், சூடாக்கித் துணியில் கட்டி தாடையின் பக்கவாட்டில், வெளிப்புறத்தில் ஒத்தடம் கொடுப்பதாலும் நிவாரணம் பெறலாம். ஓமம் அப்படியே பயன்படுத்தும்போது, பிரசவித்தப் பெண்களுக்குத் தயாரித்துக்கொடுக்கப்படும் மருந்து குழம்பு, சாம்பார், பிற காய் குழம்புடன் கால் தேக்கரண்டி அளவில் மட்டுமே சேர்க்கலாம். இரவில் ஊற வைத்து காலையில் நீராக அருந்தும்போது 5 மி.லி வீதம் ஒரு நாளைக்கு இரண்டு வேளைகள் போதுமானது. இனிப்பு கலந்த ஓமநீர் என்றால், ஒரு வயது வரையுள்ள குழந்தைக்கு, ஒரு நாளைக்கு 5 மி.லி அளவில் கொடுக்கலாம். பெரியவர்கள் 10 மி.லி வரையில் எடுத்துக்கொள்ளலாம்.

ஓமம் அதிகளவு எடுத்துக்கொண்டால், அதி-லிருக்கும் தைமால் என்னும் வேதிப்பொருள், உடலில் ஒவ்வாமையை ஏற்படுத்தி, வயிறு உப்புசம், குமட்டல், வாந்தி, மயக்கம் போன்ற அறிகுறிகளை உருவாக்கிவிடும். குறிப்பாக, கருவில் இருக்கும் குழந்தையின் படிப்படியான வளர்ச்சி நிலைகளில் சிக்கல் ஏற்படுத்தும் ஆபத்து இருக்கிறது என்பதால், கர்ப்பிணிப் பெண்கள் ஓமம் அதிகளவு எடுத்துக்கொள்ளவதைத் தவிர்க்க வேண்டும். பொதுவாகவே ஓமம் உடல் சூட்டினை அதிகரிக்கும் என்பதாலும், மாதவிடாய் ரத்தப் போக்கினை அதிகப்படுத்திவிடும். எனவே, அந்த நேரத்தில், தொடர்ச்சியாகப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

# உறவின்முறை சங்கம்???

நாம் ஒவ்வொருவரும் சமூகத்தில் பல அமைப்புகளில் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கிறோம். நாம் வசிக்கும் வீடு ஒரு நகரில் உள்ள போது அந்த நகர குடியிருப்போர் சங்கத்தில் உறுப்பினராக இருக்கிறோம். சாலை, மின், வடிகால் வசதிகளில் குறை இருப்பின் அந்த குடியிருப்போர் சங்கத்தின் வாயிலாக உரிய அலுவலகத்திற்குச் சென்று குறைதீர்க்க முயலுகிறோம். ஊதியம் மற்றும் பணி சார்ந்த பிரச்சனை இருப்பின் நாம் அங்கம் வைக்கும் பணியாளர் சங்கத்தின் மூலம் முறையிடுகிறோம். அதுபோல விவசாயம் செய்கையில் உதாரணமாக உழவர் சந்தை, மார்க்கெட்டிங் கமிட்டிகளில் பிரச்சனை எனில் நம் விவசாய சங்கத்தின் மூலம் அதனை தீர்க்க முயல்கிறோம். இவ்வாறு நாம் ஒவ்வொருவரும் இன்னும் – வியாபாரிகள் சங்கம், நுகர்வோர் சங்கம், பெற்றோர் சங்கம், நூலக படிப்போர் சங்கம், விளையாட்டு வீரர் சங்கம், ஆன்மீக சேவா சங்கம், ஓய்வூதியதாரர் சங்கம், மொழி/ இன/ ஊர் வாரி சங்கம், வெளிமாநிலத்தில் வாழும்போது தமிழர் சங்கம், வெளிநாட்டில் வாழும் போது இந்தியர் சங்கம் என பல அமைப்புகளில் உறுப்பினர்களாக இருக்கிறோம். வெகுசிலர் அரசியல் கட்சிகளிலும் இருக்கின்றோம்.

இப்படி பல்வேறு அமைப்புகளில் இருப்பதன் நோக்கம் என்ன? நம்முடைய ஒவ்வொரு பிரச்சனையையும் தீர்ப்பதற்கும், சில சமயங்களில் பாதுகாப்பிற்கும் உரிய அமைப்புகளை அணுகி அவற்றின் மூலம் பலன் பெறுகிறோம். இவற்றிற்கும் மேலாக ஒவ்வொரு அமைப்பில் உள்ள உறுப்பினர்களோடு பழகும்போதும், அவர்களின் சுகதுக்கங்களில் பங்கேற்கும்போதும் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

உறவின்முறை சங்கம் அதாவது சாதி சங்கத்தில் அங்கம் வகிப்பதும் அதுபோலதான். உதாரணமாக EWS / BC/ சிறுபான்மை மொழியினர் சான்றிதழ்கள் பெறுதலில் பிரச்சனை ஏற்படும் போது நமது ரெட்டி சங்கங்கள் உதவுகின்றன. மேலும் மணமக்கள் குறித்த தகவல்கள் பரிமாற்றுவதிலும், நமது சமூக, கலாச்சார பண்பாட்டை பாதுகாப்பதிலும் பங்கு வகிக்கின்றன. இங்கும் உறவுகளுடனும், நட்புகளுடனும் பழகி மகிழ்கிறோம்.

நாம் அங்கம் வகிக்கும் பல சமூக அமைப்புகளுள் சாதி சங்கமும் ஒன்று. தொழில்கள் அடிப்படையில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சாதி அமைப்புகள் உருவாகி வளர்ந்து வேரூன்றி விட்டன. ஆங்கிலேயர்கள் வருவதற்கு முன்பு உலக நாடுகளின் மொத்த உற்பத்தியில் பாரதத்தின் பங்கு மட்டும் முதன்மையாக 35 சதவீதம் அளவில் இருந்தது. அப்போது எப்படி அது சாத்தியமாயிற்று?

வாழ்வியல் மற்றும் விவசாய கருவிகளின் உற்பத்தி, நெசவு மற்றும் சிற்ப, ஆபரண வேலை, கட்டடங்கள், அணைக்கட்டு கட்டுதல், விவசாயம், போர் புரிதல், அரசு நிர்வாகம் என பல துறைகளும் மிகச் சிறப்பாக விளங்கின.

இவற்றையெல்லாம் கற்பிக்க அப்போது எந்த கல்விக்கூடங்கள் இருந்தன? அத்தனையும் குலக்கல்வி என்னும் குடும்ப வழி பயிற்சி மூலமாக சாத்தியமாயிற்று. இத்தகைய தொழில் அடிப்படைகளான குலங்களே சாதிகளாக மாறின. அப்போது சாதிய அமைப்புகள் தேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு பலமான அடிப்படையாக அமைந்தன.

ஆனால் அவற்றுடனே மோசமான பக்க விளைவாக சாதியபேதம் அதாவது சாதிகளில் இவையெல்லாம் உயர்ந்தது, அவையெல்லாம் தாழ்ந்தது என்ற வேறுபாடு தோன்றி விட்டது. இந்த பேதத்தை தடுக்க பெரிய அளவில் முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. இந்த சாதிய பேத உணர்வுகளே சாதிகளுக்கு இடையே வெறுப்பைத் தூண்டி விட்டன.

இன்றைய நவீன உலகில் அனைத்து தொழில்களுக்கும் முன்னேறிய தொழில் நுட்பத்துடன் கூடிய கல்விக்கூடங்கள் தோன்றி விட்டன. விளைவாக குலக்கல்வி முறை மறைந்து விட்டது. அதாவது சாதிய அமைப்புகளின் நோக்கமாக இருந்த தொழில் முன்னெடுப்பு தற்போது குறிப்பிடத்தக்க அளவில் இல்லை. எனினும் தற்போது ஒவ்வொரு சாதிய அமைப்பும் அந்தந்த சாதிகாரர்களின் உரிமை மற்றும் பாதுகாப்பினைப் பெறுவதில் உதவிபுரிகின்றன. தற்போது சில இடங்களில் சாதிய அமைப்புகளிடையே நிகழும் வெறுப்பு தேவைதானா என்பதை சிந்திக்க வேண்டும். பணியாளர் சங்கங்கள் ஒன்றுக்கொன்று மோதுகின்றனவா? குடியிருப்பு சங்கங்கள் தங்களிடையே மோதிக்கொள்கின்றனவா? கரும்பு, நெல் விவசாய சங்கங்களிடையே மோதல் நிகழ்கின்றதா? சாதிகள் இருப்பதால்தான் பேத உணர்வு உள்ளது, எனவே சாதிகளை ஒழிக்க வேண்டும் என சிலர் எண்ணுகின்றனர். பணம் என்ற ஒன்று உள்ளபோது கூடவே லஞ்சமும் வருகிறது. இங்கு ஒழிக்க வேண்டியது லஞ்சத்தைத் தானே தவிர, பணத்தை அல்ல. அதுபோல ஒழிக்க வேண்டியது முதலில் சாதிய பேதம் தான். எதிலும் பேதம் பார்ப்பது என சிலரது மனம் பழகிவிட்டது. மேலும் எல்லா சாதிகளிலும் நல்லவர்களும், கெட்டவர்களும் உள்ளனர்.

நாம் பங்கேற்கும் பல அமைப்புகளில் நாம் களம் மாறுவோம். நாம் வீட்டை மாற்றும்போது நமது குடியிருப்போர் சங்கமும் மாறும். நமது பணியில் மாற்றம் வரும் போது பணியாளர் சங்கமும் மாறும். இதுபோல எல்லா அமைப்புகளும் காலப்போக்கில் மாறிக்கொண்டே இருக்கும். சமூக பரிணாம வளர்ச்சியில் சாதிய அமைப்பின் முக்கியத்துவமும் குறைந்துக்கொண்டே வருகின்றது. எனினும் இன்றைய, இத்தகைய சூழலில் சாதிய அமைப்பை முறையாகவும், மற்றும் எண்ணம், சொல், செயல் என மூன்றிலும் நேர்மறையாகவும் பயன்படுத்துவது தான் சிறந்தது.

கீழ்காணும் நோக்கங்களைக் கொண்டு நமது ரெட்டி சங்கங்கள் செயல்பட்டு சமுதாயத்திற்குப் பயனளிக்கட்டும்.

★ பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் உதவுதல், சான்றிதழ்கள் பெறுதல் போன்ற அரசு தொடர்புடைய செயல்பாடுகளில் உதவுதல்.

★ பண்பான, வன்முறையற்ற அணுகுமுறை, விருந்து உபசாரம், பொதுநலன்களில் ஈடுபாடு போன்ற இன்னும் பல பாரம்பரிய உயர்வான நமது பழக்கவழக்கங்களை அடுத்த தலை முறைக்கு கொண்டு செல்லல்.

மேற்காணும் நோக்கங்களைக்கருத்தில் கொண்டு செயல்படுத்த நமது சங்கங்கள் ஒவ்வொரு ஆண்டும் அந்த வருடத்திற்கான செயல்பாடுகளின் கால அட்டவணையை முன் கூட்டி தயாரித்தலையும், அதனை சிறப்பாக செயல்படுத்துதலையும் மேற்கொள்ள வேண்டும். இதில் சங்க பொறுப்பாளர்களுடன், உறுப்பினர் களும் ஆர்வத்துடன் பங்காற்ற வேண்டும்.

ஒரு பல்லக்கினை சுமந்து செல்வோர்கள் தான் அந்த பல்லக்கின் வேகத்தை நிர்ணயிக் கின்றனர். அதுபோல சங்க உறுப்பினர்களின் ஒட்டு மொத்த ஈடுபாடு தான் சங்க செயல்பாடுகளின் வெற்றிப் பயணத்தை நிர்ணயிக்கிறது. எனவே முழு ஈடுபாட்டைக் காண்பிப்போம்.

**நாம் உயர்வோம், பிறரையும் உயர்விப்போம்.**

R. இராஜசேகரன் விழுப்புரம்.

| | |
|---|---|
| தமிழ் | 099, |
| ஆங்கிலம் | 098 |
| இயற்பியல் | 100 |
| வேதியியல் | 100 |
| உயிரியல் | 100 |
| கணிதம் | 100 |

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திருமங்கலம் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட கட்ராம்பட்டி கிராமத்தை பூர்வீகமாக கொண்டு தற்போது அரியலூர் மாவட்டம் மீன்சுருட்டி என்ற ஊரில் ஸ்ரீ மதுரை முனியாண்டி விலாஸ் ஓட்டல் நடத்திவரும் திரு.கொண்டல்ராஜ்– சீத்தம்மாள் இவர்களின் மகள் **K.அஸ்விதா** +2 தேர்வில் 597 மதிப்பெண்கள் பெற்று மாநிலத்தில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

| | |
|---|---|
| தமிழ் | 098 |
| ஆங்கிலம் | 096 |
| பொருளாதாரம் | 100 |
| வர்த்தகம் | 100 |
| வணிகவியல் | 100 |
| வணிக கணிதம் | 100 |

தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் தாலுகா, மலைப்பட்டி குமரெட்டையபுரம் கிராமத்தை சேர்ந்த திரு.T.சுரேஷ் ரெட்டி– S.விமலா அவர்களின் புதல்வி **S.தர்ஷினி** நடந்து முடிந்த 12–ம் வகுப்புத் தேர்வில் 600க்கு 594 மதிப்பெண்கள் பெற்று சென்னை ஊரப்பாக்கம் ஆனந்தவல்லி மெட்ரிகுலேஷன் பள்ளியில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார்.


# ரெட்டி மலர் சந்தா படிவம்

| சந்தாவிற்கான கால அளவு | சந்தா தொகை | (✓) டிக் செய்யவும் |
|---|---|---|
| 1 ஆண்டு | 180/- | |
| 3 ஆண்டு | 500/- | |
| 15 வருட சந்தா | 2500/- | |

பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

..........................................................

தொலைபேசி : ..........................................................

நான் இத்துடன் ............ வருட சந்தா / 15 வருட சந்தா தொகை ரூ...................... டிடி / மணியார்டர் / காசோலை மூலம் Reddy Elainger Peravai (ரெட்டி இளைஞர் பேரவை) என்ற பெயரில் எடுத்து இணைத்துள்ளேன்.

நாள் : ______________ சந்தாதாரரின் கையொப்பம் : ______________________________

**சந்தா தொகையை அனுப்ப வேண்டிய முகவரி**

**ரெட்டி மலர்**

எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை,
சென்னை – 600 083. 044 - 2485 3333, 9688877700.
E-mail Id : reddymalar06@gmail.com,
Website : www.reddymalar.com,
Twitter : @malar_reddy.twitter.com
Online Website : www.reddymalar.com

**ACCOUNT PAYEE :**
**REDDY ELAINGER PERAVAI**
BANK NAME : **INDIAN BANK**
BRANCH : **JAFFERKHANPET,**
A/C. NO. : **7105534900**
IFSC CODE : **IDIB000J019**

# NATIONAL ENGINEERING COLLEGE

(An Autonomous Institution - Affiliated to Anna University, Chennai)
K.R. NAGAR, KOVILPATTI – 628503
+91 9385976674 / +91 9385976684 / 04632 - 222502 www.nec.edu.in principal@nec.edu.in

FOUNDER, K.R. CONSORTIUM & INSTITUTIONS, K.R. NAGAR
THIRU.K.RAMASAMY 1936 - 2019

ESTD : 1984

39 YEARS OF ACADEMIC EXCELLENCE 2022 - 2023

TNEA COUNSELLING CODE 4962

## COURSES OFFERED

### UG

- B.E. - Mechanical Engineering *
- B.E. - Electronics & Communication Engineering *
- B.E. - Computer Science and Engineering *
- B.E. - Electrical & Electronics Engineering *
- B.Tech. - Information Technology *
- B.E. - Civil Engineering
- B.Tech. - Artificial Intelligence and Data Science

### PG

- M.E. - Energy Engineering
- M.E. - Embedded Systems Technologies
- M.E. - Computer Science and Engineering
- M.E. - High Voltage Engineering
- M.Tech. - Information Technology (Information and Cyber Warfare)

## PLACEMENT STATUS

For 2022 Batch
95% Placement

For 2023 Batch
200+ Offers
175+ Internship Offers
as on 05th September 2022

## ON CAMPUS INDUSTRY

Mistral Solutions, Bangalore
Brimma Tech, USA

95% CONSISTENT PLACEMENT
150+ COMPANIES
625+ OFFERS
15 LPA HIGHEST SALARY



### NEC Special Features

- ARIIA 2021 Band - Excellent 10th Rank (All India Level) Under Private or Self Financial Technical Institutes Category
- Institution's Innovation Council 4 STAR RATING
- nirf Rank - 169
- DST - FIST Sponsored
- Accredited with Grade A NAAC
- K.R. Innovation Centre
- NBA Accredited*
- NewGen IEDC, DST, New Delhi

### FEW OF OUR PRESTIGIOUS RECRUITERS

amazon, TATA Consultancy Services, ZOHO, Cognizant, accenture, Infosys, HCL, VVDN Technologies, Tessolve, wipro, Data Patterns, Mistral, Brakes India Private Limited, Capgemini, Centizen, Elite Constructions, embedUR, vuram, Hexaware, Tech Mahindra

# Lakshmi Ammal Polytechnic College

(Approved by AICTE, New Delhi and Directorate of Technical Education, Tamil Nadu)
Ph: 04632 - 222506, 63819 20408 352lapc@gmail.com / principal@lapc.in www.lapc.in.

39 YEARS OF ACADEMIC EXCELLENCE 2022 - 2023

COURSES OFFERED

- Civil Engineering
- Mechanical Engineering
- Automobile Engineering
- Electronics & Communication Engineering
- Electrical & Electronics Engineering

# K.R. College of Arts & Science

Ph: 04632 - 248 981, 222 981 principal@krcollege.net www.krcollege.net


COURSES OFFERED

UG
B.A. - English B.Com. - Professional Accounting
B.Sc. - Computer Science, Bio Chemistry, Micro Biology & Mathematics

PG
M.Sc. - Computer Science
M.Sc. - Micro Biology

# KR Kayaar Exports Private Limited

(Spinning Unit)
Railway Feeder Road, K.R.Nagar, Kovilpatti - 628 503, Thoothukudi Dist, Tamil Nadu, India
Ph: 04632-222510, 248258, 94425 38774 ttn_krgroup@yahoo.com, ttnkrgroup@gmail.com



ரெட்டி இளைஞர் பேரவை நடத்தும்


# ரெட்டி திருமணத் தகவல் மையம்

எண் 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை,
சென்னை - 600 083. காசி தியேட்டர் எதிரில், காமராஜ் சிலை அருகில்
044 - 2485 3333, 96888 77700 E-mail : reddymatrimonired@gmail.com,
for online Registration website : www.reddymatrimony.co.in

## மணமகள்

| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | G 7328 | 22.5.1991 | M.C.A. B.Ed | பூரம் | —— | —— |
| 2 | G 7329 | 10.06.1993 | B.Tech. LLM | அவிட்டம் | Assistant Professor | Rs.10 Lakhs / PA |
| 3 | G 7330 | 09.12.1989 | M.C.A. | அஸ்வினி | IT Professional | Rs.80,000/- PM |
| 4 | G 7331 | 04.11.1999 | LLB, LLM | உத்திரம் | Training Solicitor in London | —— |
| 5 | G 7332 | 12.06.1998 | B.Tech. MBA | உத்திராடம் | —— | —— |
| 6 | G 7333 | 18.11.1997 | MBBS, MS | புனர்பூசம் | Doctor | Rs.50,000/- Stipend |
| 7 | G 7334 | 22.02.1996 | B.A. B.L. LLM | ரேவதி | Legal Consultant | Rs.40,000/- PM |
| 8 | G 7335 | 23.01.1998 | B.Arch. MS | அனுஷம் | Studying in USA | —— |
| 9 | G 7336 | 21.12.1998 | B.Com. PGDM | உத்திராடம் | HR Basement | Rs.50,000/- PM |
| 10 | G 7337 | 12.04.2000 | B.E. | பூரம் | Barclays | Rs.15 Lakhs/ PA |
| 11 | G 7338 | 25.11.2000 | B.Com. | விசாகம் | Accountant | Rs.25,000/- PM |
| 12 | G 7339 (Divorcee) | 20.07.1994 | B.E. | கேட்டை | Programmer Analyst | Rs.17 Lakhs / PA |
| 13 | G 7340 | 04.06.1997 | M.A. | கிருத்திகை | Assistant Professor | Rs.4.4 Lakhs / PA |
| 14 | G 7341 | 07.02.1998 | B.E. | மிருகசீரிஷம் | Infosys | Rs.50,000/- PM |
| 15 | G 7342 | 31.10.1999 | BCA, MDFD | புனர்பூசம் | —— | —— |
| 16 | G 7343 | 31.05.1997 | B.E. | உத்திரட்டாதி | Software Engineer | Rs.8.5 Lakhs / PA |
| 17 | G 7344 | 15.09.1998 | M.Tech. | புனர்பூசம் | Private Sectpr | —— |
| 18 | G 7345 | 19.04.2000 | B.E. | சுவாதி | Software Engineer | Rs.4.25 Lakhs / PA |
| 19 | G 7346 | 15.04.1998 | B.Sc. MBA | அனுஷம் | Business | —— |
| 20 | G 7347 | 10.12.1994 | B.Com. | பூரட்டாதி | Wells Torgo | Rs.4 Lakhs / PA |
| 21 | G 7348 | 07.03.2001 | B.E. MBA | ஆயில்யம் | —— | —— |
| 22 | G 7349 | 28.01.2000 | M.E. | சுவாதி | —— | —— |

| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 23 | G 7350 | 01.03.1999 | BAMS | மகம் | Doctor BAMS | —— |
| 24 | G 7351 | 17.05.1998 | M.Tech. | உத்திராடம் | Assistant Professor | Rs.40,000/- PM |
| 25 | G 7352 | 20.06.2001 | MBBS | ரோகிணி | Doctor | —— |
| 26 | G 7353 | 12.01.1996 | M.Tech. | அஸ்தம் | Central Govt. Job | Rs.66,000/- PM |
| 27 | G 7354 | 19.06.2000 | B.D.S | உத்திராடம் | —— | —— |
| 28 | G 7355 | 03.08.1993 | B.E. | அவிட்டம் | Micro Service Developer | Rs.25 Lakhs / PA |
| 29 | G 7356 | 18.08.1997 | B.E. | அவிட்டம் | Software Professional | Rs.9-10 Lakhs / PA |
| 30 | G 7357 | 10.02.1996 | MBBA. M.D. | சித்திரை | Doctor | —— |
| 31 | G 7358 | 11.12.2000 | B.Com. | ரோகிணி | —— | —— |
| 32 | G 7359 (Divorcee) | 25.10.1991 | M.Tech. | கார்த்திகை | Private Sector | —— |
| 33 | G 7360 | 05.01.1998 | ME. M.Tech. MBA, MCA | ரேவதி | Valeo India | Rs.7 Lakhs / PA |
| 34 | G 7361 | 11.08.1992 | B.E. | உத்திராடம் | Software Engineer | Rs.2 Lakhs / PM |
| 35 | G 7362 | 12.08.2000 | B.Com. CA | பூராடம் | —— | —— |
| 36 | G 7363 | 09.10.1996 | B.Tech. MS | மகம் | USA | —— |
| 37 | G 7364 (Widow) | 13.03.1996 | B.E. | மூலம் | Account Manager | Rs.5-6 Lakhs / PA |
| 38 | G 7365 | 02.10.1996 | B.E. | ரோகிணி | Indian Bank | Rs.5.5 Lakhs / PA |
| 39 | G 7366 | 06.12.1999 | BA. MBA | விசாகம் | Financial Data Operator | Rs.3 Lakhs / PA |
| 40 | G 7367 | 03.07.1999 | B.Com. CA | அவிட்டம் | Studying USA | —— |
| 41 | G 7368 | 13.02.1996 | MBBS, NBEMS | அனுஷம் | Student | Rs.50,000/- PM |
| 42 | G 7369 | 06.06.1998 | B.Com. CA, CPA | சுவாதி | CA Associate | Rs.8 Lakhs / PA |
| 43 | G 7370 | 09.10.1999 | B.Sc. M.Sc. | சித்திரை | —— | —— |
| 44 | G 7371 | 14.07.1995 | B.Tech. | திருவோணம் | IBM Software | Rs.18 Lakhs / PA |
| 45 | G 7372 | 23.06.2000 | M.A. B.Ed. | சதயம் | —— | —— |
| 46 | G 7374 | 20.10.2002 | B.Com. | ரேவதி | —— | —— |
| 47 | G 7375 | 16.01.2000 | B.Com. | கிருத்திகை | IT Company | Rs.20,000/- PM |
| 48 | G 7376 | 01.11.1997 | B.E. | விசாகம் | Aujus Network | Rs.10 Lakhs / PA |
| 49 | G 7677 | 29.06.1999 | B.E. | மூலம் | Data Analyst | Rs.6 Lakhs / PA |



ரெட்டி இளைஞர் பேரவை நடத்தும்

# ரெட்டி திருமணத் தகவல் மையம்

எண் 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை,
சென்னை - 600 083. காசி தியேட்டர் எதிரில், காமராஜ் சிலை அருகில்
044 - 2485 3333, 96888 77700 E-mail : reddymatrimonired@gmail.com,
for online Registration website : www.reddymatrimony.co.in

## மணமகன்

| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | B 10966 | 08.08.1991 | MCA | திருவாதிரை | Professor | Rs.35,000/- PM |
| 2 | B 10967 | 02.07.1992 | BCA | ஆயில்யம் | IT | Rs.40,000/- PM |
| 3 | B 10968 | 11.01.1998 | B.Com. MBA | திருவாதிரை | Aditya Birla Group | Rs.16,000/- PM |
| 4 | B 10969 | 24.02.1996 | B.Com. | பரணி | Fund Accountant | Rs.40,000/- PM |
| 5 | B 10970 | 05.03.1993 | B.E. MBA. CA | பூசம் | Accounts Executive | Rs.50,000/- PM |
| 6 | B 10971 | 18.03.1997 | B.Tech. MBA | பூசம் | Vietnam | Rs.9 Lakhs / PM |
| 7 | B 10972 | 09.09.1994 | B.Sc. MBA | சித்திரை | Analyst | Rs.55,000/- PM |
| 8 | B 10973 (Divorcee) | 16.02.1991 | B.Com. MBA | பூரட்டாதி | Accounts Executive | Rs.25,000/- PM |
| 9 | B 10974 | 03.05.1997 | B.Sc. M.Sc. | உத்திரட்டாதி | AECC Global | Rs.70,000/- PM |
| 10 | B 10975 | 16.02.1996 | B.E. | பூராடம் | Software | Rs.50,000/- PM |
| 11 | B 10976 | 21.08.1992 | M.A. LLB | கிருத்திகை | Business | Rs.2 Lakhs / PA |
| 12 | B 10977 (Divorcee) | 03.07.1989 | B.E. | புனர்பூசம் | Designer | Rs.50,000/- PM |
| 13 | B 10978 (Divorcee) | 14.03.1985 | B.E. PGDM | மூலம் | Sales Manager | Rs.13.2 Lakhs / PA |
| 14 | B 10979 | 13.08.1994 | B.Sc. | சுவாதி | Own Business | Rs.1.20 Lakhs / PM |
| 15 | B 10980 | 20.11.1989 | B.A. M.A. | ஆயில்யம் | Electrician Contractor | Rs.40,000/- PM |
| 16 | B 10981 (Divorcee) | 20.02.1994 | B.E. MBA | மிருகசீரிஷம் | Accenture | Rs.8 Lakhs / PA |
| 17 | B 10982 | 29.04.1998 | B.Com. | ரோகிணி | GRT Jewelry | Rs.30,000/- PM |
| 18 | B 10983 | 11.01.1994 | B.Tech. | பூராடம் | TCS | Rs.60,000/- PM |
| 19 | B 10984 | 22.01.1994 | B.Com. | கிருத்திகை | Autotech Industries | Rs.30,000/- PM |
| 20 | B 10985 | 06.11.1993 | M.Tech. | பூசம் | Senior Test Engineer | Rs.8 Lakhs / PA |
| 21 | B 10986 | 30.03.1995 | B.Tech. | பூரட்டாதி | Senior Project Engineer | Rs.9-10 Lakhs / PA |
| 22 | B 10987 | 08.06.1996 | B.E. | பூரட்டாதி | Software Engineer | Rs.1,80,000/- PM |
| 23 | B 10988 | 24.07.1996 | B.E. MA | சுவாதி | Postal Assistant | Rs.51,000/- PM |

| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 24 | B 10989 | 07.05.1991 | B.E. MBA. | அவிட்டம் | Senior Sales Manager | Rs.9 Lakhs / PA |
| 25 | B 10990 | 29.03.1994 | B.Tech. | சித்திரை | IT Company | Rs.95,000/- PM |
| 26 | B 10991 | 05.08.1995 | B.E. | விசாகம் | Canara Bank | Rs.9,60,000/- PA |
| 27 | B 10992 | 04.02.1995 | B.E. M.Tech. | உத்திரட்டாதி | Oil Manufacturing | Rs.20 Lakhs / PA |
| 28 | B 10993 | 07.01.1997 | B.E. | கேட்டை | Tata | Rs.20 Lakhs / PA |
| 29 | B 10994 | 10.01.1993 | B.E. | பூசம் | Site Development | Rs.60 Lakhs / PA |
| 30 | B 10995 | 06.11.1982 | MBA | புனர்பூசம் | Junior Executive | Rs.35,000/- PM |
| 31 | B 10996 | 12.04.1999 | B.Tech. | சதயம் | Software Engineer | Rs.65,000/- PM |
| 32 | B 10997 | 24.11.1997 | B.Tech. | உத்திரம் | Software Engineer | Rs.12-14 Lakhs / PA |
| 33 | B 10998 | 23.08.1997 | MBBS | பரணி | Germany | 25,000/- Euro |
| 34 | B 10999 | 12.07.1996 | B.Com. MBA | ரோகிணி | Business | Rs.1 Lakh / PM |
| 35 | B 11000 | 13.07.1995 | B.Arch. | திருவோணம் | Zarah Concept | Rs.60,000/- PM |
| 36 | B 11001 | 12.11.1995 | MBA | புனர்பூசம் | Manager | Rs.30,000/- PM |
| 37 | B 11002 | 02.10.1993 | B.E. | ரேவதி | Senior Executive | Rs.40,000/- PM |
| 38 | B 11003 | 20.02.1996 | B.E. | பூரட்டாதி | Technical Consultant | Rs.12 Lakhs / PA |
| 39 | B 11004 | 28.10.1993 | B.Tech. | ரேவதி | Maintenance Engineer | Rs.40,000/- PM |
| 40 | B 11005 | 25.03.1993 | B.E. | அஸ்வினி | Senior Engineer | Rs.65,000/- PM |
| 41 | B 11006 | 05.08.1994 | B.Sc. MBA | புனர்பூசம் | Senior Executive | Rs.8 Lakhs / PA |
| 42 | B 11007 | 04.07.1996 | B.E. | சதயம் | IT Bosch | Rs.1,20,000/- PM |
| 43 | B 11008 | 06.07.1995 | DEEE. M.A. | சித்திரை | Own Business | —— |
| 44 | B 11009 | 22.01.1998 | B.E. | விசாகம் | Trubore Pipes | Rs.1 Lakhs / PM |
| 45 | B 11010 | 11.11.1996 | B.E. MS | விசாகம் | USA | 1,10,000 USD |
| 46 | B 11011 | 01.02.1994 | B.E. | சித்திரை | Standard Charted Bank | Rs.5 Lakhs / PA |
| 47 | B 11012 | 06.01.1995 | M.E. | பூரட்டாதி | Design Engineer | Rs.9 Lakhs / PA |
| 48 | B 11013 | 21.05.1998 | B.E. | உத்திரட்டாதி | Reliance Smart Manager | Rs,40,000/- PM |
| 49 | B 11014 | 30.11.1996 | B.E. MBA | பூசம் | IT Sector | Rs. 7-8 Lakhs / PA |

| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 50 | B 11015 | 02.05.1994 | MBBS MD DM | திருவோணம் | Doctor | Rs.1,30,000/- PM |
| 51 | B 11016 (Divorcee) | 15.01.1995 | B.E. MBA | திருவாதிரை | Software Engineer | Rs.82,000/- PM |
| 52 | B 11017 | 06.07.1990 | B.Com. | மூலம் | Private Sector | Rs.30,000/- PM |
| 53 | B 11018 | 12.03.1990 | BBA | உத்திரம் | Senior Executive | RS.50,000/- PM |
| 54 | B 11019 | 06.12.1980 | BBA | அனுஷம் | Construction | Rs.35,000/- PM |
| 55 | B 11020 | 03.04.1993 | B.Tech. | மகம் | Technical Leader | Rs.17 Lakhs / PA |
| 56 | B 11021 | 05.05.1989 | DEEE | பரணி | Own Business | Rs.35,000/- PM |
| 57 | B 11022 | 27.05.1994 | B.E. | மூலம் | Software Engineer | Rs.5.5 Lakhs / PA |
| 58 | B 11023 | 05.10.1993 | M.Tech. | ரோகிணி | Singapore | Rs.3 Lakhs / PM |
| 59 | B 11024 | 24.11.1997 | B.E. | உத்திரம் | System Engineer | Rs.50,000/- PM |
| 60 | B 11025 | 15.06.1996 | DEEE. B.Sc. | ரோகிணி | Business | Rs.60,000/- PM |
| 61 | B 11026 | 19.10.1993 | DME, B.Tech. | கேட்டை | Supervisor | Rs.35,000/- PM |
| 62 | B 11027 | 06.10.1998 | B.Sc. M.Sc. | ரேவதி | Senior Java Developer | Rs.67,000/- PM |
| 63 | B 11028 | 08.10.1990 | B.Tech. | கிருத்திகை | Mavenberg | Rs.4-5 Lakhs / PA |
| 64 | B 11029 | 22.02.1994 | MBBS, MS | புனர்பூசம் | Doctor | Rs.1,25,000/- PM |
| 65 | B 11030 | 30.05.1996 | B.E. | சித்திரை | SVM Pvt.Ltd. | Rs.22,000/- PM |
| 66 | B 11031 | 14.10.1996 | MCA | சுவாதி | Customer Executive | Rs.30,000/- PM |
| 67 | B 11032 | 07.09.1994 | B.E. MSW | அஸ்தம் | Senior Executive | Rs.60,000/- PM |
| 68 | B 11033 | 12.03.1997 | B.E. | அஸ்வினி | Sales Executive | Rs.40,000/- PM |
| 69 | B 11034 | 13.06.1994 | B.E. | ஆயில்யம் | Team Leader | Rs,17 Lakhs / PA |
| 70 | B 11035 | 26.08.1995 | B.Com. MBA | மகம் | Private Sector | Rs.55,000/- PM |
| 71 | B 11036 | 12.04.1996 | M.S. | திருவோணம் | Australia | Rs.3.5 Lakhs / PM |
| 72 | B 11037 | 07.05.1997 | B.E. | கிருத்திகை | Software Engineer | Rs.18-20 Lakhs / PA |
| 73 | B 11038 | 03.01.1999 | B.Tech. | பூசம் | Software Engineer | Rs.1,30,000/- PM |
| 74 | B 11039 | 27.10.1997 | M.Sc. | பூரம் | Software Developer | Rs.40,000/- PM |
| 75 | B 11040 | 03.01.1998 | B.Tech. | சதயம் | Lead Cloud Engineer | Rs.20 Lakhs / PA |

| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 76 | B 11041 | 10.09.1994 | B.Tech. MBA | விசாகம் | Senior Analyst | Rs.9 Lakhs / PA |
| 77 | B 11042 | 27.10.1996 | B.E. MS | பரணி | Development Executive | Rs.5 Lakhs / PA |
| 78 | B 11043 | 03.04.1995 | B.E. MBA | பரணி | Software Developer | Rs.9 Lakhs / PA |
| 79 | B 11044 | 02.10.1997 | B.E. | அஸ்தம் | Private Sector | Rs.6 Lakhs / PA |
| 80 | B 11045 | 31.07.1997 | B.E. | மிருகசீரிஷம் | Qatar | Rs.25 Lakhs / PA |
| 81 | B 11046 | 26.04.1996 | B.E. | பூசம் | Private Sector | Rs.17 Lakhs / PA |
| 82 | B 11047 | 21.10.1995 | B.E. | பூரம் | Dubai | Rs.1,50,000/- PM |
| 83 | B 11048 | 15.07.1998 | DME, BA | உத்திராட்டாதி | IT Sector | Rs.35,000/- PM |
| 84 | B 11049 | 09.10.1992 | B.Tech. MS | பூரட்டாதி | California | $1,50,000 / PA |
| 85 | B 11050 | 01.01.1997 | B.E. | அஸ்தம் | Web Designer | Rs.40,000/- PM |
| 86 | B 11051 | 20.07.1994 | B.Sc. | மூலம் | Dubai | Rs.80,000/- PM |
| 87 | B 11052 (Divorcee) | 25.07.1985 | B.E. | சுவாதி | TCS | Rs.10 Lakhs / PA |
| 88 | B 11053 | 01.10.1976 | B.Sc. | பூராடம் | Distribution Food | Rs.6-7 Lakhs / PA |
| 89 | B 11054 | 01.03.1994 | M.Des | சித்திரை | Automobile Designer | Rs.10.50 Lakhs / PA |
| 90 | B 11055 | 14.11.1994 | B.Tech. MBA | உத்திராட்டாதி | TCS | Rs.6-7 Lakhs / PA |
| 91 | B 11056 | 11.09.1995 | DME | ரேவதி | Business & Agriculture | Rs.5 Lakhs / PA |
| 92 | B 11057 | 01.12.1984 | M.Com. | பூரட்டாதி | Billing Sales & Service | Rs.60,000/- PM |
| 93 | B 11058 | 26.10.1996 | B.E. | அஸ்வினி | Senior Test Engineer | Rs.12 Lakhs / PA |
| 94 | B 11059 | 06.09.1994 | MCA | பூரம் | Software Engineer | Rs.45,000/- PM |
| 95 | B 11060 | 14.08.1996 | B.E. | ஆயில்யம் | IT Company | Rs.80,000/- PM |
| 96 | B 11061 | 17.01.1997 | B.E. | பரணி | Civil Engineer | Rs.80,000/- PM |
| 97 | B 11062 | 06.02.1996 | BBA | மகம் | ACL Pvt. Ltd | Rs.30,000/- PM |
| 98 | B 11063 | 17.06.1990 | B.E. | உத்திரட்டாதி | Fleet Management | Rs.23,98,000/- PA |
| 99 | B 11064 | 26.08.1993 | MS | மூலம் | Swedan | Rs.2 Lakhs / PM |
| 100 | B 11065 | 05.05.1995 | P.E.D. | புனர்பூசம் | Fitness Coach | Rs.40,000/- PM |
| 101 | B 11066 | 26.09.1994 | B.Sc. | ரோகிணி | Assistant Manager | Rs.65,000/- PM |

# KRT CAREER ACADEMY

*Leads You Towards Success...!!!*

(A Unit of OPR MEMORIAL CHARITABLE TRUST, CHENNAI)

**FREE COACHING**

JOIN NOW

TNPSC Group 2 & 2A Test Batch

## ADMISSION OPEN - NEW BATCH START

## PHONE NO : 96888 77722, 73054 24439

கே.ஆர்.டி.கேரியர் அகாடமியில் இலவசப் பயிற்சி எடுத்துக் கொண்ட
மாணவ, மாணவிகள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (TNPSC) நடத்திய
குரூப் II A தேர்வில் வெற்றிப் பெற்று அரசு பணி ஆணை பெற்ற
மாணவ, மாணவிகளுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

## வெற்றிப் பெற்ற மாணவ, மாணவிகள்



**T. ராஜராஜன்**
TNPSC Group I தேர்வில்
வெற்றிப் பெற்று காவல்துறையில்
துணை காவல்
கண்காணிப்பாளராக (DSP)
1.7.2024 முதல் பயிற்சியினை
முடித்து பொறுப்பேற்க உள்ளார்



**P.மஞ்சுளா**
Assistant
in Rural Department



**S.சத்யா**
Assistant
Department of HR & C



**C.சந்தோஷ்குமார்**
Assistant
in Revenue Department



**S.ஷண்முகப்ரீத்தா**
Assistant
in Registration Department



**G.ஹேமாம்பிகா**
Assistant
in School Education Department



**C.தேவேந்திரன்**
Assistant
in Treasury Department



**G.அஜீத்குமார்**
Assistant
Department of HR & C



**G. கலையரசன்**
Senior Co-Operative Society
Auditor



**R. பவதாரணி**
Assistant
in Employment Department



**K. வடிவேல்**
Junior Co-Operative Society
Auditor



**V.M. செந்தில்குமார்**
Assistant Supernatant Officer
Health & Rural Development Dept.

No.34A, Gangai Amman Koil Street, Jafferkhanpet, Chennai - 600 083, E-mail : krtacadamy2020@gmail.com

REDDY MALAR, Tamil Monthly, RNI No. TNTAM/2006/18783, R.Dis.No.63/2021
Date of Publication : 1st week of Every Month




Printed by S.SUNDAR RAMAN and Published by V.SELVARAJU on behalf of REDDY ELAINGER PEREVAI and Printed at VASAN PRINT MFG CO, 29, Dr.Besant Road, Chennai - 600 014 and Published at New No.34A, Old No.36/1A, Gangai Amman Koil Street, Jafferkhanpet, Chennai - 600 083. Editor : R.RAJASEKARAN.